விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 16 திங்கட்கிழமை (02.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 348

## நாய் விறாண்டி சிறுமி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நாய் விறாண்டிய சிறுமியொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

நவாலி தெற்கு மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த சிவநேசன் துஷக்ஜினி (வயது 10) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் இச்சிறுமிக்கு நாய் விறாண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் நாய் விறாண்டியுள்ளதை கவனிக்காது வீட்டார் இருந்துள்ளனர்.

தொடர்ந்து இச்சிறு 20ம் பக்கம் பார்க்க

### றெக்ஷியன் சுட்டுக்கொலை

## சந்தேகங்களை கிளப்பும் திடுக்கிடும் தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷியன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 26ஆம் திகதியன்று நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புங்குடு தீவிலுள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

ஆரம்பத்தில் குறித்த மரணம் தற்கொலை என கூறப்பட்ட போதிலும் பிரேத பரிசோதனையின் பின்னர் அவர் துப்பாக்கியினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என கண்டறியப்பட்டது.

வடபகுதியில் ஆயுததாரிகள் எவருமில்லை என அரச கூறிவருகின்ற நிலையில் குறித்த கொலைச் சம்பவம் அனைவரிடத்திலும் பலத்த சந்தேகங்களினை ஏற்படுத்தியிருந்தது.

இக் கொலைக்கு மைக்ரோ ரக 9 எம்.எம் (9 மில்லி மீற்றர்) ரக துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டுள்ளது. 20ம் பக்கம் பார்க்க

## இலங்கை படையினருக்கு இந்திய பட்டப்படிப்பு!

### ஜெயலலிதா கடும் எதிர்ப்பு



இலங்கை கடற்படை அதிகாரிகளுக்கு இந்தியக் கடற்படை தொழில்நுட்ப பட்டப்படிப்பை வழங்குவதற்கான திட்டத்துக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடுமையான ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ள ஜெயலலிதா, இலங்கை கடற்படைக்கு பயிற்சி வழங்குவது என்று இந்தியக் கடற்படை உயர் அதிகாரி இலங்கைக்கு வழங்கியுள்ள வாக்குறுதியானது, இலங்கையில் வாழும் சிறுபான்மை தமிழ் மக்களுக்கும், இலங்கை கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படும் தமிழக மீனவர்களுக்கும் எதிரானது என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.


தமிழக மக்களின் மன உணர்வுகளை 20ம் பக்கம் பார்க்க

# இலங்கை இனப்படுகொலைக்கு மகிந்தவே முழுப் பொறுப்பு

### மன்மோகனுக்கு அதில் பங்கு உண்டு - பா.ஜ.க

(டெல்லி)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே முழுப் பொறுப்பையும் ஏற்றாகவேண்டும். அதில் அதிகளவான பொறுப்பு இந்தியப் பிரதமர் மன்மோகனுக்குரியது என பாரதிய ஜனதா கட்சி குற்றம் சாட்டியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க...)



வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகைக்கும் இடையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றபோது...

## இலங்கை விவகாரத்தில் தலையிட இந்தியாவிற்கு உரிமை இல்லை

### அமைச்சர் சுசில் காட்டம்


இலங்கையில் இணைந்த வடக்கு - கிழக்கு பிராந்தியத்தில் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்ற இந்திய அமைச்சர் சிதம்பரத்தின் கருத்துக்கு இலங்கை அரசு காட்டமான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டு விவகாரம் பற்றி பேசுவதற்கு வெளியாட்களுக்கு உரிமை கிடையாது என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் மூத்த அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இலங்கை தனி இறையாண்மை கொண்ட ஒரு நாடு. இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்ட நடைமுறைகள் பற்றி பேசு 19ம் பக்கம் பார்க்க

## இராணுவத்தினரின் கெடுதல்களைப் போல் பாதீனச் செடிகளின் தொந்தரவு அதிகரிப்பு

### செடி அழிப்பு ஆரம்ப நிகழ்வில் முதல்வர் உரை



(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து வந்த இராணுவத்தினர் தமிழர்களுக்கு என்னென்ன கெடுதல்களை இழைக்க நினைக்கின்றனரோ அதேபோன்று பாதீனச் செடிகளும் வடக்கிலும் கிழக்கிலும் பரவி பல தொந்தரவுகளைச் கொடுத்து வருகின்றன என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் பாதீன செடி அழிக்கும் மாதமாக இந்த மாதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு நேற்றையதினம் யாழ். புத்தூர் நிலாவரைச் சந்திப் பகுதியில் பாதீனச் செடியை அழிக்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் கலந்து [illegible] 20ம் பக்கம் பார்க்க

## தமிழர்களின் உரிமை மறுக்கப்படுகிறது

### அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஆஸ்லி வில்ஸ்

(கொழும்பு)

வடக்கில் தமிழர்களின் உரிமை மறுக்கப்படுகிறது என இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் இன மற்றும் மத சுதந்திரம் இருக்கின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக அமெரிக்க காங்கிரஸ் சபை விசேட குழுவொன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவில் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிகளின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன என்றும், அவர்களின் வணக்கஸ்தலங்கள் திட்டமிட்ட அடிப்படையில் தாக்கப் 19ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் இன்று இலங்கை விஜயம்!

## விக்னேஸ்வரனையும் சந்திப்பார்

(ஜெனிவா)

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானி நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்கிறார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதியான இவர் யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தந்து வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ் மாவட்ட கட்டளைத்தளபதி மஹிந்த ஹத்துரு சிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், வலிகாமம் வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள கோணப்புலம் நலன்புரி நிலையத்துக்கும் அவர் சென்று, அங்குள்ள மக்களின் குறைநிறைகளைக் கேட்டறியவுள்ளார்.

இதன் பின்னர் எதிர்வரும் புதன்கிழமை இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவடடத்துக்குச் செல்லும் அவர், அங்கு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், அம்மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் மார்க் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அதேவேளை, கொழும்பில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவிததுள்ளார்.



இவரது இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கை அடுதத வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறும் ஐ.நா. மனித வுரிமைகள் ஆணைக குழுவின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத் தன்படி சிறப்புப் பிரதிநிதிகளை இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுததப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## யாழ்.வைத்தியசாலை தொடர்பில் அமைச்சர் திஸ்ஸ ஆராய்வு

(கொழும்பு)

சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண யாழ். போதனா வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை அமைச்சர் விஜயம் செய்துள்ள நிலையிலேயே வைத தியசாலையின் தேவைப் பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

மேற்படி வைத்தியசாலையின் சத்திர சகிச்சைக் கூடத்தை அமைச்சர் பார்வை பிட்டதுடன், யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப் பாளர் திருமதி பவானி பசுபதிராஜாவுடனும அமைச்சர் கலந்துரையாடினார்.

இந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் தாதியர்கள் பற்றாக்குறை, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நிலவும் ஊழியர்கள் பற்றாக்குறை ஆகியன தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கொண்டுவந்தார்.

இதன்போது யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் செ.ஸ்ரீபவானந்தராஜா, வைத்தியர்கள் உள்ளிட்டோரும் உடனிருந்தனர். (செ-4)


**பிள்ளையார் இன்**

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829 (சி-5631)



**உடனடி வேலைவாய்ப்பு**

மத்திய கிழக்கு கட்டாரை தலைமையகமாகக் கொண்டு 2006 ஆம் ஆண்டு முதல் இயங்கும் Morning Star Trading and Contracting கம்பனியில் மத்திய கிழக்கில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

**தொழில்**

1. மேசன்
2. சட்றிங் காப்பென்ரர்
3. வெல்டர்
4. ஸ்தில் திஸ்ரார்
5. எலக்ரீசியன்ஸ்
6. பிளம்பர்
7. ஏ.சி ரெக்னீசியன்

மேலதிக வேலைவாய்ப்புக்களும் உண்டு. உணவு, தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும். இரண்டு வருட ஒப்பந்தம். நேர்முகப் பரீட்சை புதன்கிழமை 04.12.2013 அன்று காலை 8.00 - 3.00 மணிவரை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும். இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

**சம்பளம் தகுதி அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்**

**தொடர்புகளுக்கு : 077 911 9075** (4628)



**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்**



**ஸ்ரீ ஸ்ரீ யோகா**
**(13 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும்)**

**எளிய யோகாசனங்கள் !**
**பிராணாயாமம் !**
**தியானம் !**

இடம் : மகேஸ்வரன் மணி மண்டபம், நல்லூர்.
நாள் : 04.12.2013 (புதன்) முதல் 08.12.2013 (ஞாயிறு) வரை
நேரம் : காலை 6-8 அல்லது மாலை 6-8

பதிவு செய்ய அழையுங்கள் : 077 1000 750, 077 507 1363, 077 1315 933

வாழும் கலை அமைப்பின் சர்வதேச மாதாந்த இதழ் ரிஷிமுக் பெறப் பதிவினை மேற்கொள்ளவும். (4629)



**மனத் தளர்வா? தனிமையா? தற்கொலை எண்ணமா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம்.
உடனே அழையுங்கள்.
இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**
**021 222 8117** (C-5586)



வீழ்ச்சி கண்ட யாழ்ப்பாண கலை இலக்கியத்துறை எழுச்சி காண உதயமாகியது

**திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்**

- எங்கள் ஊர் இலக்கியம் தற்போது அடையாளம் இழந்து போகின்றது.
- இலக்கிய ஒன்றுகூடல்கள், நூல் வெளியீடுகள், கலாசாரச் சந்திப்புக்கள் அறவே இல்லை என்கின்ற நிலை.
- ஈழத்து எழுத்தாளர்கள் தமது புத்தாக்கங்கள் வெளியிடுவதென்பது தற்கொலைக் கொப்பான செயலாக மாறியுள்ளது.
- வாசிப்புப் பழக்கம் தற்போது மறைந்து வருகின்றது.

இந் நிலைமாற்றம் காண முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டி சமூகப்பொறுப்புடன் தனது நிதி ஊட்டத்தில் உருவாக்கிய சுதந்திரமான செயற்பாட்டிற்குரிய சமூக தனி அலகே 'திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்'.

- வருடந்தோறும் இரண்டு இலட்சம் நிதி ஊட்டம் திசைகாட்டியிடமிருந்து கிடைக்கும்.
- யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் எவரும் இதன் உறுப்புரிமை பெறலாம.
- இதன் உறுப்புரிமையில் திசைகாட்டி பங்கு பெறாது சுயாதீனமாக இயங்கும்.
- திசைகாட்டி இயக்குநர் சபை இதற்காக இணைப்பாளர் ஒருவரை நியமிக்கும்.
- உறுப்பினர்கள் தாம் தமது செயற்குழுவைத்தேர்வு செய்து நடாத்திச் செல்லலாம்.

எழுத்தாளர்கள், ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட அனைவரையும் 15.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறவுள்ள ஆரம்ப ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கருத்தாய்ந்து எம்மை வழி நடத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு பணிவன்புடன் கேட்கிறோம்.

தயவு கூர்ந்து தொலைபேசி மூலம் முற்பதிவு செய்யவும்

பொது முகாமையாளர்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**



175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
www.thisaivisa.com (4630)


**ஈரவிழிகளுடன் 45ஆவது அகவை நினைவலைகள்**

உறவுகள் மகிழ 02 12 1968



உறவுகள் நெகிழ 25 11 2013

செல்வி
கந்தையா பற்குணசோதி (சுலா)
(சோதி ரீச்சர்)
பாலாவி, கொடிகாமம்

**(முன்னாள் புனித / சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம். தற்போதைய கோண்டாவில் பரஞ்சோதி மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு ஆசிரியர்)**

மெழுகுவர்த்தி போல் உன்னை உருக்கி
உறவுகளுக்கு ஒளி கொடுத்த சோதியே
மின்னாமல் முழங்காமல் உறவுகள் அனைவரையும்
கண்ணீர் மழையில் நனைய வைத்து
எங்கு சென்றாய்?

**அகவை நாளில் உன் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டி நிற்கும் உறவுகள், நண்பர்கள், மாணவர்கள்.** (4630)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஏழுவகை மனிதர்கள்

இந்த உலகத்தில் ஏழுவகையான மனிதர்கள் இருக்கிறார்களாம் என்று டாக்டர் எட்வேட் பாட்ச் என்பவர் சொல்கிறார்.

மனிதர்களின் மனோநிலையின் அடிப்படையில் அவர்களை ஏழு வகையாகப் பிரிக்கலாம் என்கிறார் அவர்.

முதல் வகை: பயந்த குணமுள்ளவர்கள்.

"சேர் மிகவும் பயந்த சுபாவம். வீட்டில் கூட வாயைத்திறக்கமாட்டார். சாப்பிடும் போது மட்டும்தான் கொஞ்சம் வாயைத் திறப்பார்" என்று சொல்லுகிறோமல்லவா. அவர்களெல்லாம் இந்த ரகம்.

இரண்டாவது வகை: சஞ்சலப்படுபவர்கள்.

எதற்கெடுத்தாலும் கலக்கம் – குழப்பம் – இப்படியே காலம் தள்ளுபவர்கள் பலரை பார்த்திருப்பீர்கள். அவர்களெல்லாம் இந்த ரகம்.

மூன்றாவது வகை: யதார்த்த உலகை மறந்து கற்பனை உலகில் மிதப்பவர்கள்.

இளைஞர்கள் – கவிஞர்கள் இப்படிப்பலர் இருக்கிறார்கள். எப்பொழுது பார்த்தாலும் கற்பனை உலகிலேயே மிதந்து கொண்டிருப்பார்கள். அருகில் போய் என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீங்க என்று கேட்டுப்பாருங்கள்.

ஓர் அற்பப் புழுவைப் பார்ப்பது போல் உங்களைப் பார்ப்பார்கள்.

"அதோ அந்த வானத்து நிலா என்னை வா என்று கூப்பிடுகிறது. எனக்கு விரைவில் ஒருநாள் சிறகுகள் முளைக்கும். சிறகடித்துப் பறந்து செல்வேன். என் செல்ல நிலாவை கொஞ்சி விட்டுத் திரும்பி வருவேன்." என்பார்கள்.

"கொஞ்சுவது அப்புறம் இருக்கட்டும். இப்ப கஞ்சிக்கு வழியைப்பாரடா" என்றால் அதைக் காதில் வாங்கமாட்டார்கள்.

நான்காவது மனிதர்கள்: தனிமை உணர்வு மிக்கவர்கள்.

இவர்களெல்லாம் மற்றவர்களுடன் சகஜமாக நெருங்கி பழகுவதில்லை. தானுண்டு தன் வேலையுண்டு என்று செல்பவர்கள்.

அடுத்த வீட்டில் யார் இருக்கின்றார்கள் என்று கேட்டால் கூட "அடுத்த வீடு என்று ஒன்று இருக்கிறதா?" என்று கேட்பார்கள் அவர்களிடம் மேற்கொண்டு எதைப் பேசுவது?

ஐந்தாவது வகை மனிதர்கள்: மற்றவர்களின் செல்வாக்குக்கு உட்பட மறுப்பவர்கள்.

அடுத்தவர்களின் செல்வாக்குக்கு இவர்கள் ஆட்படுவதில்லை "நான் யார் தெரியுமா?" என்று கேட்டால் "அதைத் தெரிந்து கொண்டு எனக்கு என்ன ஆகப்போகிறது?" என்பார்கள்.

ஆறாவது வகை மனிதர்கள்: எப்பொழுதும் எதிலும் பற்று இல்லாமல் இருப்பவர்கள்.

இது ஒரு துறவு மனப்பான்மை. இயல்பாகவே சிலபேர் இப்படியுண்டு. அவர்களுக்கு எதிலும் ஒரு ஈடுபாடு இருக்காது.

ஏழாவது வகை மனிதர்கள்: மற்றவர்களின் கவல்லயை தன்னுடையதாக ஆக்கி கொண்டு கவலைப்படுபவர்கள்.

இவர்கள் மகாத்மாக்கள். தான் வேறு அவர்கள் வேறு என்ற எண்ணம் இவர்களுக்கு வருவதில்லை. அதனால் மற்றவர்களுக்கு ஒரு கஷ்டம் வந்தால் அதைத் தன்னுடைய கஷ்டமாக எடுத்துக் கொண்டு கவலைப்படுவார்கள்.

இப்படி ஏழுவகையான மனிதர்களை அடையாளம் காட்டுகிறார் அந்த நிபுணர். இதில் நாம் எந்தரகத்தில் வருகிறோம் என்பதை நாம்தான் அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் உண்டு.

அவர் வித்தியாசமான ஆள். எதையும் நடைமுறைக்கு சாத்தியமா என்று யோசிப்பவர். நாமும் சந்தோஷமாக இருக்க வேண்டும். மற்றவர்களும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுபவர்.

அவருக்கு ஒரு சமயம் திடீரென்று உடம்பு சுகவீனமாகி போய் விட்டது.

டாக்டரிடம் போனார் பணம் கொடுத்து வைத்தியம் பார்த்தார்.

அவர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டை வாங்கினார். ஒரு மருந்துக் கடைக்குப் போய் பணம் கொடுத்து மருந்து வாங்கினார்.

அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

அதற்குப் பின் அந்த மருந்தை உட்கொள்ள வேண்டுமல்லவா... அவர் உட்கொள்ளாமல் அப்படியே வைத்துவிட்டார்.

நான் அவரைப் பார்த்து "ஏன் சேர்... இப்படிச் செய்கிறீர்கள்? வீண் செலவு தானே இது. நீங்க ஏன் டாக்டரிடம் போய் பணம் செலவு செய்தீர்கள்?" என்றேன்.

"டாக்டர் வாழ வேண்டுமல்லவா அதற்காக" என்றார்.

"சரி அதற்குப் பின் ஏன் மருந்து வாங்கினீர்கள்?" என்றேன்.

"மருந்துக்கடைக்காரர் வாழ வேண்டுமல்லவா அதற்காக" என்றார்.

"சரி அதேன் வாங்கின மருந்தை சாப்பிடாமல் வைத்திருக்கிறீர்கள்?" என்றேன். "நான் வாழ வேண்டுமல்லவா அதற்காக!" என்றார் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பிரபாகரனை அழிப்பதற்கு பங்கெடுத்த நாடுகள் முதலைக்கண்ணீர் வடிக்கின்றன

(கொழும்பு)

போரின் இறுதிக் காலகட்டத்தில விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழிக்க வேண்டும் என்று விரும்பிய சில நாடுகள் இப்போது, தமிழர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றன என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"போரின் இறுதிக்கட்டத்தில், தாம் என்ன செய்தன மற்றும் எவ்வாறு பங்களித்தன என்பதை மறந்து விட்டு சில நாடுகள் நடிக் கின்றன. பிரபாகரனை அழிக்கும் வேலையை முடிக்க வேண்டும் என்று எமக்குக் கூறியவர்கள் இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனால், தனது நாட்டில் உள்ள வட அயர்லாந்துக்கு செல்லமுடியவில்லை. ஆனால் இலங்கையின் வடக்குப் பகுதிக்கு அவர் எந்தப் பிரச்சினையுமின்றி செல்ல முடிந்தது.

அங்கே சில குறைபாடுகள் இருக்கலாம், தாமதங்களும், வடக்கில் இன்னும் செய்ய வேண்டியவையும் இருக்கலாம். ஆனால், வடக்கிலுள்ள மக்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்தவற்றை மதிக்க வேண்டும். நாம் அவர்களுக்கு அமைதியையும் ஜனநாயகத்தையும் கொண்டு வந்துள்ளோம்.

எத்தகைய பிரச்சினைகள், வேறுபாடுகள் என்றாலும், அவற்றை தீர்க்கும் பொறுப்பு எமது கைகளில் தான் உள்ளது. அதற்காக நாம் அனைவரும் பணியாற்ற வேண்டும். எதிர்க்கட்சிகள் இங்கு அதிகாரத்தை கைப்பற்ற முடியாது.

அடுத்த 20 ஆண்டுகளுக்கு இந்த நாட்டை ஆளப்போவது ராஜபக்சக்கள்தான். அது உறுதி" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அமெ. தூதுவர் நியமனம் யாருக்கு கிடைக்கும்?

கனடாவுக்கான புதிய இலங்கைத் தூதுவராக, ஜாலிய விக்கிரமசூரிய, நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது இவர் அமெரிக்கத் தூதுவராக பணிபுரிகின்றார்.

இவர் கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம், 2008 வரை லொஸ் ஏஞ்சல்சில் துணைத் தூதராகவும், 2008 தொடக்கம், தற்போது வரையான ஐந்து ஆண்டுகளாக அமெரிக்காவுக்கான தூதுவராகவும் பணியாற்றி வருகிறார்.

இவர் இம் மாதத்துடன் வோசிங்டனிலுள்ள தூதரகத்தில் பணிகளை நிறைவு செய்வார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதையடுத்து, அமெரிக்காவுக்கான தூதுவராக யார் நியமிக்கப்படவுள்ளார் என்பது குறித்து எந்த அதிகாரபூர்வ தகவலும் வெளியாகவில்லை.

எனினும் இந்தப் பதவிக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் நான்கு மூத்த அதிகாரிகளின் பெயர்கள் அடிபடுகின்றன.

இதன் பிரகாரம் ஐ.நாவுக்கான தூதுவர் பாலித கோஹன்ன, இந்தியாவுக்கான தூதுவர் பிரசாத் காரியவசம், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலர் சேனுகா செனவிரத்ன, வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம ஆகியோரே அவர்களாவர். (அ-2)

# சான்றிதழ் வழங்கல்

(மல்லாவி)

வடக்கு மாகாணத்தின் கல்வித் திணைக் களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் நடை பெற்ற மாகாண மட்ட ஆங்கிலதினப் போட்டியில் மொழி மற்றும் நாடகப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் யா/ இராமநாதன் கல்லூரியில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் என். சோமஸ்கந்தராசா அறிவித்துள்ளார்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் ஆங்கிலம் மற்றும் பிறமொழிக்கல்விப் பிரிவு பணிப்பாளர் திருமதி மகேசி வீரசூரியா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-9-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 - 100 | 120 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 60 - 90 | 60 | 70 | 120 |
| தக்காளி | 15 - 40 | 30 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 - 35 | 30 | 50 | 40 |
| கோவா | 20 | 20 | 60 | 40 |
| கரட் | 50 | 40 | 40 | 80 |
| பூசணி | 30 | 20 | 30 | 50 |
| புடோல் | 20 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 - 210 | 200 | 220 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 - 120 | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 60 | 60 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 | 50 |
| பயற்றங்காய் | 60 | 60 | 30 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 90 | 80 |
| பீற்றூட் | 20 | 40 | 30 | 60 |
| கறிமிளகாய் | 100 | 60 | 70 | 120 |
| முருங்கைக்காய் | 60 - 100 | 100 | 60 | 100 |
| போஞ்சி | 120 | 90 | 100 | 120 |
| கத்தரி தம்புள்ள | 15 | - | 20 | - |
| கீரை - 1 பிடி | 10 - 20 | 40 | 25 | 25 |
| தேசிக்காய் | 80 - 120 | 80 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 60 | 50 | 50 | 35 - 45 |
| இராசவள்ளி | 200 - 250 | 160 | - | - |

# இராசி பலன்

02.12.2013
(கார்த்திகை 16, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 8.20 மணிவரை
அமாவாசை முற்பகல் 8.21 தொடக்கம்
விசாகம் முற்பகல் 7.34 மணிவரை
இராகுகாலம் 7.45 - 9.15 மணிவரை
சுபநேரம்12.15 - 1.45 மணிவரை
மூன்றாம் சோம வாரம், அமாவாசை விரதம்

**மேடம்** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், எதிர் பாராத வகையில் சில பிணக்குகள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**இடபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள், செய்யும் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், புகழ் கூடும்.

**மிதுனம்** சுவாஸ்யமான நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையிலிருந்த குழப்பங்கள் அகலும், செய் தொழில் மேன்மையுண்டு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பாசம் கூடும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முன்வருவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**சிங்கம்** தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பயந்த சுபாவமுண்டு, தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், புதிய பொருட்கள் வாங்கும் சிந்தனை மேலோங்கும்.

**கன்னி** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் நீங்கும், செய் தொழில் மேன்மையுண்டு, அதிகாரிகள் உதவியுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், சகோதர ஒற்றுமை பலப்படும்.

**துலாம்** நிலையான வருமானத்திற்கு வழிவகுத்துக் கொள்வீர்கள், சில விவாதங்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுப காரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், மனதில் இனம்புரியாத சிந்தனைகள் குடி கொள்ளும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**தனுசு** குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், தொழில் நலன் கருதியே பயணங்கள் உருவாகலாம், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும்.

**மகரம்** மறக்க முடியாத இனிய சம்பவங்கள் ஏற்படலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களினால் தொழிலில் தகுதியை உயர்த்தும்.

**கும்பம்** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், போசன நன்மையுண்டு.

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியையும் தொடர்வீர்கள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், பயணங்களால் பலன் உண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமானா வங்கியின் ஆரம்ப பொது பங்கு விநியோகம்




இஸ்லாமிய வங்கிக் கொள்கையுடன் முற்றிலும் இணங்கி செயற்பட்டுவரும் இலங்கையின் உத்தரவுபெற்ற முன்னணி வர்த்தக வங்கியான அமானா வங்கி ஆரம்ப பொதுப் பங்கு விநியோகத்தின் ஊடாக நிதிச் சந்தையின் பட்டியலில் இடம்பிடிப்பதற்காக கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திடமிருந்து இணக்கப்பாட்டைப் பெற்றுள்ளது.

திரி சவி சபையின் பட்டியலில் இடம்பிடிப்பதற்கு எதிர்பார்க்கும் இந்த வங்கி ரூபா 7/= வீதம் 214,300,000 புதிய சாதாரணப் பங்குகளை விநியோகிக்க உள்ளதுடன் மிகை கொள்வனவின்போது மேலதிகமாக 71,500, 000 புதிய சாதாரணப் பங்குகளை விநியோகிப்பதற்கும் உத்தேசித்துள்ளது.

குறிப்பிட்ட பங்குகள் முழுதும் விநியோகிக்கப்படுவதன் மூலம் 1,500,100,000 ரூபா திரட்டப்படும் அதேவேளை மேலதிக விருப்பத் தெரிவு செயற்படுத்தப்பட்டு, மேலதிக பங்குகள் முழுவதும் விநியோகிக்கப் பட்டால், அதன் மூலம் 2,000,600,000 ரூபா பெற்றுக் கொள்ளப்படும்.

அமானா வங்கியின் ஆரம்ப பொதுப் பங்கு விநியோகம் என்பது கடந்த 2 வருடங்களில் ஒரு உத்தரவு பெற்ற வர்த்தக வங்கி விநியோகிக்கும் முதலாவது ஆரம்ப நிலைப் பொதுப் பங்கு விநியோகத்தை குறிக்கும். தற்போதைய உலக கட்டமைப்பில் வளர்ச்சி கண்டுவரும் இஸ்லாமிய வங்கித் துறையில் முதலீடு செய்வதற்கு இலங்கைச் சந்தைக்கு கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்தை இந்த ஆரம்ப பொதுப் பங்கு விநியோகம் வழங்குகின்றது.

அமானா வங்கியின் முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி பைசல் சாலிஹ் கருத்து வெளியிடுகையில், எமது பிரத்தியேக வங்கிமுறை மூலம் நாம் வங்கியியல் துறையில் ஒரு வித்தியாசமான பாதச்சுவடை பதித்துள்ளதுடன் நாட்டின் பொருளாதார மூலோபாயத்திற்கு ஏற்ற ஒரு வர்த்தக உத்தியுடன் நாம் ஒரு துரித பயணத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இந்த ஆரம்பப் பொதுப் பங்கு விநியோகத்தின் மூலம் திரட்டப்படும் நிதி 2013-ம் ஆண்டிலும், 2015-ம் ஆண்டில் தேவைப்படும் குறைந்த பட்ச மூலதன தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப் படுவதோடு, வங்கியின் 'வளர்ச்சிக்காகவும், விரிவாக்கலுக்காகவும் பயன்படுத்தப்படும்" என்றார்.

# டிமோவுக்கு விருது

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறந்த கூட்டாண்மை குடிமகன் விருது 2013 இல், முதலாமிடத்தை டீசல் மோட்டர்ஸ் என்ஜினியரிங் தன்வசப்படுத்தியிருந்தது.

முறையே 2-ம் மற்றும் மூன்றாமிடங்களை சம்பத் வங்கி மற்றும் எயிட்கன்ஸ்பென்ஸ்ஆகியன தம்வசப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இரு பிரிவுகளில் வழங்கப்பட்டிருந்த விருதுகளில் ஏ பிரிவில் முதல் மூன்று இடங்களை டீசல் மோட்டர்ஸ் என்ஜினியரிங், சம்பத் வங்கி, எயிட்கன் ஸ்பென்ஸ் ஆகியன பெற்றிருந்ததுடன், பி பிரிவில் முதல் 3 இடங்களை ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி, அக்சஸ் என்ஜினியரிங் மற்றும் கொகா கோலா ஆகியன தம் வசப்படுத்தியிருந்தன.

முதல் 10 இடங்களில் அக்சஸ் என்ஜினியரிங், எயிட்கன் ஸ்பெ ணஸ், பிரான்டிக்ஸ் லங்கா, சிலோன் டொபாக்கோ கம்பனி, கொமர்ஷல் வங்கி, டீசல் மோட்டர்ஸ் என்ஜினியரிங், தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, சிங்கர் சிறிலங்கா, ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி ஆகியன தம்வசப்படுத்தியிருந்தன.

# 'எம் காஷ்' சேவை

## மொபிடெல் அறிமுகம்

தமது வர்த்தக நாமத்தின் தொனிப் பொருளான 'உங்களுடனே என்றும்' என்பதற்கு அமைவாக, தேசிய தொலைத் தொடர்பு சேவைகள் வழங்குநரான சிறிலங்கா ரெலிகொம், மொபிடெல் அண்மையில் தனது மற்றுமொரு புரட்சிகரமான மக்கள் வாழ்க்கை முறையினை மேலும் இலகுபடுத்தும் 'mCash' சேவையை அறிமுகம் செய்துள்ளது.

'mCash' சேவை என்பது அனைத்து மொபிடெலின் அனைத்து முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கும் செல்லுபடியாகும். 'mCash' கணக்கொன்றை #111# எனும் இலக்கத்துடன பதிவு செய்து கொள்வதன் மூலமாக பணத்தை அனுப்பவும் பெறவும் முடியும். அத்துடன் கட்டணப்பட்டியல்களை செலுத்தவும், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் முடியும்.

இந்த சேவை அறிமுகம் செய்யப்பட்டதை தொடர்ந்து 4 ஆயிரத்துக்கும் அதிகமான 'mCash' மூலமான கொடுப்பனவுகளை மேற்கொள் ளக்கூடிய நிலையங்கள் நிறுவப்படவுள்ளதுடன், எதிர்காலத்தில் நாட்டின் 10ஆயிரம் வரையிலான கொடுப்பனவு நிலையங்களுக்கு விஸ்தரிக் கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த சேவையின் மேற்பார்வை வங்கியாக கொமர்ஷல் வங்கியும் இந்த சேவை அறிமுகத்துக்காக Deutsche Bank A.G உடன் பங்காண்மை உடன்படிக்கை ஒன்றில் மொபிடெல் கைச்சாத்திட்டுள்ளதுடன், Deutsche Bank A.G வங்கியானது இச் சேவைக்கான அறங்காப்பு வங்கியாக நியமிக்கப்பட்டுள்ளது.


இந்த தீர்வு முறையானது இலங்கை மத்திய வங்கியின் இலத்திரனியல் கொடுப்பனவு வழிகாட்டலுக்கு அமைவாக அனைத்து இலங்கையர்களுக்கும் நிதி சார் தீர்வுகளை வழங்கும் வகையில் அமைந்திருக்கும்.



பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சி நிறுவனம் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய தனது பணியாளர்களைக் கௌரவிக்கும் முகமாக அண்மையில் "முதன்மை விருதுகள் 2013" என்ற நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. தொடர்ந்து 14-வது ஆண்டாகவும் இடம்பெற்ற இந்நிகழ்வு வாதுவ புளூ வோட்டர்ஸ் ஹோட்டலில் இடம்பெற் களைக் கௌரவித்து அவர்களுக்கு வெகுமதிகளை வழங்கும் வகையிலேயே இந் நிகழ்வு இடம்பெற்றது.




# வெள்ளவத்தையில் புதிய வரவு மிராஜ் நட்சத்திர தங்குவிடுதி



கொழும்பில் நட்சத்திர அந்தஸ்துள்ள தங்குமிட வசதிகளின் புதிய வரவாக அமைகின்றது மிராஜ். வெள்ளவத்தை மெரைன் டிரைவில், அண்மையில் திறந்து வைக்கப்பட்ட 4 நட்சத்திர அந்தஸ்து கொண்ட மிராஜ் , வர்த்தக நோக்கத்துக்காக இலங்கைக்கு வருவோர் மட்டுமல்லாது, பொழுதைக்கழிக்க இங்கு வருகை தருவோரும் எல்லையற்ற சொகுசினை அனுபவிக்கும் வாய்ப்பினைத் தருகின்றது.

மிராஜின் மற்றுமொரு சிறப்பு: மிராஜின் சகல அறைகளும் பிரத்தியேகமான வெப்பசீர்நிலைக் கட்டுப்பாடுகள், வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகள், மினி பார், 24 மணி நேர அறைச் சேவைகள், பாதுகாப்பு லொக்கர்கள், சட்டிலைட் இணைப்புகளுடன் 32 அங்குல லெட் தொலைக காட்சிப் பெட்டி, வைஃபை இணைப்புகள் மற்றும் அறையில் தேனீர் அல்லது கோப்பி தயாரிக்கும் வசதிகளை உள்ளடக்கியவை.

அறைகளின் பல்கணிகளில் இருந்த வண்ணமே சூரியோதய, சூரிய ஸ்தமனக் காட்சிகளை கண்டு இரசிக்கலாம். அதேபோல கிங்ரொஸ் கடற்பகுதியில் பாதுகாப்பான கடற்குளியலிலும் ஈடுபடலாம்.

இரவு வேளைகளில் மொட்டை மாடியில் உள்ள உணவகத்தில் உண்பது நிலாச்சோறுண்ணும் அனுபவத்தினைத் தருகின்றது.

# CIMA நிறுவனத்துடன் SLIIT இணைவு



கணினி, வணிகம் மற்றும் பொறியியல் துறைகளில் 6ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புக்களை வழங்கி வரும் SLIIT கல்வியகம் பட்டய மேலாண்மைக் கணக்கியல் நிறுவனத்துடன் (CIMA) புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இவ்விரு கல்வியகத்தின் சார்பாகவும் CIMA-UK இன் முகாமைத்துவ பணிப்பாளர் அன்ட்ரூ ஹார்டிங் மற்றும் SLIIT நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பணிப்பாளருமான பேராசிரியர் லலித் கமகே ஆகியோர் உடன்படிக்கையை கைமாற்றிக் கொண்டனர். இந் நிகழ்வில் குறித்த இரு நிறுவனங்களையும் சேர்ந்த பலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்த இணைப்பின் ஊடாக SLIIT நிலையத்தில் வணிக முகாமைத்துவ பட்டதாரி நெறியை பயிலும் மாணவர்கள் வணிக முகாமைத்துவபட்டத்தையும் CIMA இன் தொழில்சார் தகுதியையும் பெற்று சவால்களை எதிர்கொள்ளக் கூடிய திறனுடன் தொழிற்துறையில் பிரவேசிக்க முடியும். இந்த பங்காண்மை மூலம் மாணவர்களின் செலவும் நேரமும் மிச்சமாக்கப் படும். கடந்த 2005-ம் ஆண்டு தொடக்கம் SLIIT மற்றும் CIMA என பன கைகோர்த்துள்ளன.

## இலங்கையில் அறிமுகம்



இலங்கையில் ஜெர்மனியின் விளையாட்டுத்துறை கார் வகையான Porsche கார்களின் உத்தியோகபூர்வ இறக்குமதியாளர்களான யூரோகார்ஸ் பிரைவேற் லிமிடெட் (Eurocars (Pvt)Ltd) புதிய Porsche Panamera S E-கைப்ரைட் கார்களை அறிமுகம் செய்கின்றது. கொழும்பு சின்னமன் கிரான்ட் ஹோட்டலில் நவம்பர் மாதம் 28-ம் திகதி இந்தக் கார்களின் அறிமுகம் இடம்பெற்றது. Porsche Panamera S e- Hybrid கார்களானது உலகின் முதலாவது பிளக்-இன் ஆடம்பர வகையைச் சேர்ந்த கார்களாகும்.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,792.72 | 5,775.09 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3197.88 | 3174.63 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,467.599 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** ரேணுகா (X) (15.00), புளூ டைமன்ட்ஸ்(3.40), லங்கா ஐஓசி(32.30),சிலோன் பிறின்டேர்ஸ்(1499.00),ஹே்ன்ஸ் போல்ஸ்(48.30),

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எஸ்.எம்.பி லீசிங்(X)(0.30), சௌன்டிப் என்ஜி.(121.20), பேருவளை வோல்கின்(71.30),சிங்கர் சிறிலங்கா(86.00),யூனியன் கெமிக்கல்(370.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.58 | 132.84 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 211.35 | 218.02 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 175.32 | 181.64 |
| சுவிஸ் பிராங் | 142.24 | 147.88 |
| கனேடிய டொலர் | 121.61 | 126.11 |
| அவுஸ்திரேலிய டொலர் | 116.57 | 121.33 |
| சிங்கப்பூர் டொலர் | 102.65 | 106.32 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.72 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் நோய் பரவும் நாடுகளில் இந்தியாவுக்கு இரண்டாமிடம்

உலகிலேயே இரண்டாவது இடத்தில் இந்தியாவில் எயிட்ஸ் நோயாளிகள் உள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் இதன் எண்ணிக்கை நான்கு மடங்காக உயர்ந்துள்ளது.

எயிட்ஸ் நோயை உருவாக்கும் எயிட்ஸ் தொற்று குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக டிசெம்பர் முதலாம் திகதியை சர்வதேச எயிட்ஸ் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சினால் நாடு முழுவதிலும் விழிப்பணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பற்ற உடலுறவு, மருத்துவ சிகிச்சை அல்லது ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் தூய்மையற்ற ஊசிகள், தாய்ப்பால், குழந்தை பிறப்பின் போது தாயிலிருந்து சேய்க்கு கடத்தப்படுதல் போன்ற பிரதான வழிகளில் எயிட்ஸ் ஒருவரிலிருந்து மற்றொருவருக்கு தொற்றுகி றது.

எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வு சிறப்பு நிகழ்வுகளில் பங்கேற்று, இந்நடவடிக்கைக்கு உங்கள் ஆதரவை தெரிவிக்கலாம்.

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இல்லத்திற்கு சென்று நன்கொடைகள் வழங்கலாம்.

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்கள் நீண்ட காலம் வாழ்வதற்குரிய நம்பிக்கையை ஏற்படுத்தலாம். (அ-2)

# மீனவர்கள் 32 பேருக்கும் விளக்க மறியல் நீடிப்பு

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் புல்மோட்டை கடற் பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 32 பேருக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இந்திய மீனவர்கள் 32 பேரையும் ஆஜர்படுத்திய போதே, நீதவான் இவர்களுக்கான விளக்கமறியலை நீடித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் 32 பேரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி வரைக்கும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை மாவட்ட நீதவான் யு. எல். எம். அஸ்ஹர் உத்தரவிட்டுள்ளார்.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் புல்மோட்டை கடற்பரப்பில் 4 படகுகளுடன் இந்திய மீனவர்கள் 32 பேரும் 2 மாதங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இதேவேளை இந்த மீனவர்களின் 4 படகுகளும் கப்பல் கட்டும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளன. (அ-2)

# திறமையாளர்களை உருவாக்குவது கல்வித்துறையின் பொறுப்பாகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து மாணவர்களையும் ஒன்றாகக் கருதி, திறமையற்றவர்களை திறமையானவர்களாக மாற்ற வேண்டியது கல்வித்துறையின் பொறுப்பாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹொராணையில் அமைந்துள்ள பௌத்த அறநெறி பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

அறநெறி பாடசாலையின் அதிபர ஓபல்லே ஞானஸ்ரீ தேரருக்கு ஜனாதிபதியினால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டதுடன், ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு ஜனாதிபதிக்கு தேரரும் நினைவுச் சின்னமொன்றை கையளித்தார்.

இந்த அறநெறி பாடசாலைக்கு என நிர்மாணிக்கப்பட்ட புதிய இருமாடிக் கட்டடம் இதன் போது ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. (அ-2)


## பெயர் மாற்ற அறிவித்தல்

இத்தால் சகலருக்கும் அறியத்தருவது கறுக்காய்த்தீவு பூநகரியை சொந்த இடமாகக் கொண்ட எனது பெயர் பரமானந்தசிவம் மருசன் என பிறப்புச் சான்றுப் பத்திரத்தில்உள்ளது. எனது பெயர் வருசன் என பாவிக்கப்பட்டதனால் இன்று முதல் எனது பெயரினை பரமானந்தசிவம் வருசன் என பயன்படுத்த உள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

ப.வருசன்
T.P 077-2699440

(4622)



## 62 ஆவது அகவையில் எம் ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன்



மண்ணில் எத்தனையோ மனிதர் தோன்றி மறைந்தாலும்
பாரில் சிலரது பெயரே நிலைத்திருக்கும்
அவ்வாறு நிலைத்திருக்கும் நாமங்களிலே
நம் ஸ்தாபகர் தியாகியின் நாமமும் ஒன்றாகும்
உம் பணி மென்மேலும் உயர்க!
உம் புகழ் தழைத்தோங்க!
இன்னும் பல ஆண்டுகள்
சகல சுகத்துடன் வாழ!
62ஆவது அகவையைக் கொண்டாடும்
இந் நன்நாளில் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பணிப்பாளர், பணியாளர்கள்
தியாகி அறக்கொடை நிறுவனம்,
527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(c-5630)


# ஊர்காவற்றுறை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்திய போட்டி முடிவுகளை நூலகர் கு.வைகுந்தவாசன் அறிவித்துள்ளார். இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**படம் பார்த்து கதை சொல்லல் (ஆரம்பப் பிரிவு)**

ஜீ.பிஜனுயன் (யா/றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை), அ.யோண்கிம்சன் (யா/றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை), ர.கீதா (யா/சிறியபுஸ்பம் மகளிர் மகாவித்தியாலயம்

**கட்டுரைப் போட்டி (மேற்பிரிவு)**

வி.சுகன்யா (யா/சிறியபுஸ்பம் மகளிர் மகாவித்தியாலயம்), தி.நிசாந்தினி (யா/புனித அந்தோனியார் கல்லூரி), ச.ஜெகப்பிரியா (யா/புனித அந்தோனியார் கல்லூரி)

**கட்டுரைப் போட்டி (மத்திய பிரிவு)**

ர.சங்கீர்த்தனா (யா/சிறியபுஸ்பம் மகளிர் மகாவித்தியாலயம்), அ.கிறிஸ்ரினா (யா/புனிதமரியாள் மகளிர் கல்லூரி), வி.விதுசாலினி (யா/புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்)

**பேச்சுப் போட்டி (கீழ்ப்பிரிவு)**

யோ.தேனுஜா (யா/புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்), இ.டிசோன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி), வி.கயன்னா (யா/புனித அந்தோனியார் கல்லூரி)

**சுவரொட்டிப் போட்டி (மத்திய பிரிவு)**

எஸ்.துவாரகன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி), ச.கயன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி), ம.யுலிற்றன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி)

**திறந்த பொது அறிவுப் போட்டி**

ம.ஆன்டிலானி (யா/புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்), ஜே.சிந்துஜா (கரம்பொன் கிழக்கு),க.சுவேதா (முகாம் வீதி, ஊர்காவற்றுறை)

# வாகன விபத்தில் 11 பேர் காயம்

(கொழும்பு)

மஹபாகே பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கொழும்பு-நீர்கொழும்பு வீதியில் நேற்று காலை இடம்பெற்றது.

கொள்கலனும் இரண்டு வாகனங்களும் மோதிக் கொண்டதில் இவ் விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் காய மடைந்தவர் கள் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஹபாகே பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)


## பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (பு.ப) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை
- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829
(சு/5541)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்ராடம் 4<br>கி.பா: 44உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / காப்புறுதி முகவர்<br>தொ.இ: B/140 | பிறப்பு: 1980 இந்து (Na)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 39 ¾ செவ் 4 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA / பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: G/182 |
| பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 51 செவ் 12 ல்<br>உயரம்: 5'8"தகைமை/தொழில்: Automotive Engineer (லண்டன்-Work Permit)<br>தொ.இ: B/142 | பிறப்பு: 1972 இந்து (Sekai)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 5 ¼ சூரி செவ் 11 ல்உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/189 |
| பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 38 ¼ உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA / நிர்வாக உத்தியோகத்தர் (தனியார்)<br>தொ.இ: B/143 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 52உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Com / அரச உத்தியோகம்<br>தொ.இ: G/190 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 7 ¾உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/l / சாரதி, கடை முகாமையாளர்<br>தொ.இ: B/146 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 80 சூரி செவ் 8 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Sc / தனியார் நிறுவனம்<br>தொ.இ: G/192 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியான பொருட்கள் சுகாதார குழுவால் மீட்பு

(மானிப்பாய்)


மல்லாகம் சந்திப் பகுதியில் உள்ள கடையொன்றிலிருந்து காலாவதியான பொருட்கள் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபையின் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்த குழுவினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மல்லாகம் சந்திப் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, அப் பகுதியிலிருந்த பெட்டிக் கடையொன்றிலிருந்து அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்ட நிறச் சாயங்கள் உள்ளிட்ட பொருட்களும் உற்பத்தி, காலாவதித்திகதி இடப்படாத பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்களை ஆய்வு கூடப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு, குறித்த பொருட்களின் பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன் மேற்படி விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-9-23)




# தொடரும் வீடழிப்பு தொடர்பில் வடமாகாண சபையில் பிரேரணை கொண்டு வாருங்கள்

## வலி.வடக்கு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் வலி.வடக்கில் இடம்பெறும் வீடழிப்பை நிறுத்தக்கோரி பிரேரணை ஒன்றை கொண்டுவர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மாகாண சபையின் முதலாவது அமர்வின் போது எமது வீடழிப்பு தொடர்பில் பிரேரணை எதுவும் கொண்டு வரப்படவில்லை.

எனினும் எதிர்வரும் மாகாண சபை அமர்விலாவது தமது வாழ்விட அழிப்புத் தொடர்பில் பிரேரணை ஒன்றை கொண்டு வர வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு, காணாமற்போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பிலும் பிரேரணைகளை கொண்டுவர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மக்களின் பிரச்சினைகளை விடுத்து உப்புச்சப்பற்ற பிரேரணைகளை நிறைவேற்றுவதை தவிர்த்து கொள்ளுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இது தொடர்பில் வலி. வடக்கை சொந்த இடமாக கொண்டவர்களும் தற்போது இடம்பெயர் முகாம்களில் வசித்து வரும் மக்களின் ஒரு சில பிரதிநிதிகளிடம் நேற்றைய தினம் கேட்ட போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கிலுள்ள பொதுமக்களின் வீடுகளை இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அனுமதியின்றி இடித்து வருகின்றது.

இராணுவத்தின் அத்துமீறிய வீடழிப்பின் ஆரம்பத்தின் போதே வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வும் இடம்பெற்றது.

ஆனால் மாகாணசபை உறுப்பினர்கள் எவரும் இவ்வீடழிப்பு தொடர்பில் ஆக்க பூர்வமான குறிப்பாக பிரேரணை எதனையும் முன்வைக்கவில்லை.

எனினும், ஒரு சிலர் சபையின் அமர்வில் தமது உரையின் போது கடமைக்கு மட்டும் வீடழிப்பை நினைவுபடுத்தியிருந்தனர்.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற வீடழிப்புக்கு எதிராக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றலில் அண்மையில் நடைபெற்ற தொடர் உண்ணாவிரத போராட்டத்தின் போது வீடமைப்புக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்பட்டமை தொடர்பில் மாகாண சபையின் உறுப்பினர்களிடம் நேரடியாகவே கேட்டிருந்தோம்.

தற்போது வலி.வடக்கில் வீடழிப்பு தீவிரமடைந்துள்ள நிலையில் அதனை நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை மாகாணசபை கட்டாயம் எடுத்தாக வேண்டும்.

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் உண்ணாவிரதத்துக்கு வருவார் என எம்மை ஏமாற்றியதைப் போன்று இவ் விடயத்திலும் ஏமாற்றிவிடவேண்டாம் எனவும் அவர்கள் கெஞ்சி கேட்டனர்.

வலி.வடக்கின் வீடழிப்பு தொடர்பில் பிரேரணையை கொண்டு வரும் மாகாண சபை உறுப்பினர், வலி.வடக்கில் வீடழிப்பை இராணுவம் நிறுத்த வேண்டும். அல்லது மாற்று நடவடிக்கை குறிப்பாக இராணுவத்ளதுக்கு காலக்கெடு விதிக்கும் வகையில் பிரேரணையை கொண்டு வரவேண்டும் என்றனர்.

இதேவேளை, வலி.வடக்கில் இடம்பெறுகின்ற வீடழிப்பை நேரில் சென்று பார்வையிடுவதற்கு வடக்கு முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு இராணுவம் அனுமதி மறுத்துள்ளமையினால் எதிர்வரும் சபை அமர்வில் வலி. வடக்கு வீடழிப்பு விவகாரம் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் காணாமற்போனோர் அரசியல் கைதிகள் தொடர்பிலும் இந்த அமர்வில் மாகாண சபை கரிசனை கொள்ள வேண்டு மெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-4)

# பொதுக்கூட்டம்

(தும்பளை)

வடமராட்சி கிழக்கு கலாசார பேரவையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதேச கலைஞர்களையும் கலை ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-9-19)




# சான்றிதழ் கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் எதிர்வரும் 2014 ஆம் கல்வி ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொறியியற்றுறை, தொழிற்றுறை, வர்த்தகத் துறை விசேட மற்றும் பொதுத்துறை என்ற பல்வேறு தொழில்சார் சான்றிதழ் தர கற்கை நெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முற்றிலும் இலவசமான அரச அங்கீகாரம் பெற்ற இக்கற்கை நெறிகளைப் பயிலும் முழுநேர மாணவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 50 வீதம் மாதம் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாவுக்குமேற்படாத கொடுப்பனவும் தொலை தூர மாணவர்களுக்கு பருவகால பயணச் சீட்டும் வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்கள் தொடர்ந்து தேசியத்தொழில் தகைமையிலான டிப்ளோமா தரக் கற்கை நெறிகள் 5 ஆம் 6 ஆம் மட்டங்களைப் பயில முடியும்.

இக் கற்கை நெறிகளை பயில விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற தொழில் வழிகாட்டல் மையம், தொழில்நுட்பவியல் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலோ அல்லது 021 222 0028 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம் என யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த தணிகாசலம் ஜெயரூபன் சமாதான நீதவான் பட்டம் மற்றும் சாமஸ்ரீ தேசமானிய தேசிய விருதினையும் பெற்றுக் கொண்டார்.

இதன்படி சமாதான நீதவான் பட்டத்தினை கடந்த மாதமளவில் பருத்தித்துறை நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரத்திடம் பெற்றுக் கொண்ட இவர் சாமஸ்ரீ தேசமானிய தேசிய விருதினை கடந்த 23ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண சபை முதலமைச்சரிடம் பெற்றுக் கொண்டார். (அ-9-19)




**யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழிலாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஓய்வு பெற்றுச் செல்லும் ஊழியர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் இடம் பெற்றது.**

**இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா ஓய்வு பெற்றுச் செல்லும் ஊழியர் ஒருவரை கௌரவிப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும் காற்றுடன் கூடிய காலநிலை

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் அடுத்த சில நாட்களுக்கு கடும்காற்று, இடி மின்னலுடன் கூடிய கடும் மழை பெய்யும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வடக்கு–கிழக்கு, வடமத்திய, மேற்கு ஊவா மாகாணங்களில் இரவும் பகலும் இந்த மோசமான காலநிலை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் 80 கி.மீ. இற்கு அதிகமான வேகத்துடன் காற்று வீசும் என்றும் 75 மி.மீ. இற்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்ப்பார்க்கப்படுவதாகவும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மின்னலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக பொதுமக்கள் வீடுகளுக்குள் இருந்து அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (அ–2)

## யாழ். தமிழ்ச்சங்கத்திற்கு உத்தியோகபூர்வ இணையத்தளம்

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்திற்கென உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தமிழ்ச்சங்கத்தினர் அறிவித் துள்ளனர்.

www.thamilsangam.org என்ற இணைய முகவரியைக் கொண்ட இத்தளத்தின் உத்தியோகபூர்வமான தொடக்க நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பாரதிவிழாவின் போது இடம்பெறவுள்ளது.

தமிழ்ச்சங்கம் பற்றிய தகவல்களையும் தமிழியல் சார்ந்த தகவல்களையும் இவ்விணையத்தளம் கொண்டமைந்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற தனிநாயகம் அடிகள் விழா தொடர்பில் பாடசாலை ரீதியாக பரிசுபெற்ற மாணவர்களின் படங்களையும் இதிலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ–2)

# தமிழ் மீனவர்களின் மீன்வள சுரண்டலை தமிழக முதலமைச்சர் தடுக்காதது ஏன்?

## அமைச்சர் ராஜித சேனாரட்ன கேள்வி

(கொழும்பு)

**வடக்கில் தமிழ் மக்களின் மனித உரிமை குறித்து குரல் எழும்பும் ஜெயலலிதா யுத்தம் முடிவடைந்து 33 வருடங்களின் பின்னர் தமிழ் மக்கள் தமது வாழ்க்கையை கட்டியெழுப்ப முயற்சிக்கையில் அந்த மக்களுக்கான மீன் வளத்தை தமிழக மீனவர்களை கொண்டு கொள்ளையடிப்பது நியாயமானதா? என்று மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரட்ன கேள்வியெழுப்பியுள்ளார்.**

இது தமது சகோதர மக்களுக்காக தமிழக முதல்வர் வழங்கும் பரிசா என்று கேள்வியெழுப்புகின்றோம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை மீனவர்கள் தமிழக கடல் பகுதிக்குள் அத்துமீறி பிரவேசிப்பதனால் கைது செய்யப்படுவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்துள்ளார்.

அப்படியாயின் தமிழக மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி-பிரவேசிக்கும் போது அவர்களை எமது கடற்படையினர் கைது செய்வது எவ்வாறு அநீதியாகும் என்று தமிழக முதல்வரிடம் கேள்வியெழுப்புகின்றோம்.

இந்திய மீனவர்கள் 80 பேரும் 47 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் மீனவ குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் இலங்கை மீனவர்கள் 154 பேரும் 29 படகுகளும் தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக எமது மீனவர்களுடன் அவர்களது குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றமை தமிழக முதல்வருக்கு மறந்து போயுள்ளமை கேள்விக்குறியாகும்.

தமிழக மீனவர்கள் தொடர்பில் முதலமைச்சருக்கு கவலை இருப்பதைப்போன்று எமது மீனவர்கள் குறித்து எமக்கும் கவலை இருக்கின்றது என்பதனை கூறவேண்டும். உலக மீனவர் தினத்திலும் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் கூறுகின்றார்.

ஆனால், உலக மீனவர் தினத்தன்று எமது மீனவர்களும் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக முதலமைச்சரின் அழுத்தம் காரணமாக தமிழகத்தில் உள்ள எமது மீனவர்களுக்கு உணவுகூட வழங்கப்படுவதில்லை. எமது தூதரக அதிகாரிகள் கூட மீனவர்களை பார்ப்பதற்கு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் தமிழகத்தில் உள்ள எமது மீனவர்களின் உணவுத் தேவைகளுக்காக மீனவ திணைக்களத்திலிருந்து நிதி இந்திய தூதரகத்துக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களுக்கு உணவுத் தேவை உள்ளிட்ட சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய தூதரக அதிகாரிகளும் அவர்களை சென்று பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மிக அதிகளவான மீனவர்கள் விடுவிக்கப்பட்டுவிட்டனர். அந்தவகையில் தமிழகத்தில் உள்ள எமது மீனவர்களுக்கு மனிதாபிமான தேவையைக் கூட நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்நிலையில், வடக்கில் தமிழ் மக்களின் மனித உரிமை குறித்து குரல் எழுப்பும் ஜெயலலிதா யுத்தம் முடிவடைந்து 33 வருடங்களின் பின்னர் தமிழ் மக்கள் தமது வாழ்க்கையை கட்டியெழுப்ப முயற்சிகளை முன்னெடுக்கும்போது அந்த மக்களுக்கான மீன் வளத்தை தமிழக மீனவர்களை கொண்டு கொள்ளையடிப்பது நியாயமானதா? இது தமது சகோதர மக்களுக்காக தமிழக முதல்வர் வழங்கும் பரிசா என்று கேள்வியெழுப்புகின்றோம் என்றுள்ளது. (அ–2)

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் மேஜர் ஜெனரலாக பதவி ஏற்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த நான்கு பிரிகேடியர்களுக்கு, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு வழங்கியுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவை சேர்ந்தவரான பிரிகேடியர் எச்.எல்.டேவிட் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர், ஊர்காவற்றுறையை பிறப்பிடமாக கொண்டவர் என்பதுடன், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனுமாவார்.

லண்டன் முகாமைத்துவ கற்கைகள் கல்லூரியில், கலாநிதிப்பட்டம் பெற்ற இவர், 1980 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் வெடிகுண்டு செயலிழப்பு படைப்பிரிவின் முதலாவது தளபதியாக பணியாற்றியவர்.

2009 ஆம் ஆண்டு நடுப்பகுதி தொடக்கம் இவர் கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியின் பிரதி துணைவேந்தராகவும் பணியாற்றி வருகிறார். மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளவர்களில் மலாய் சமூகத்தைச் சேர்ந்தவரான பிரிகேடியர் எம்.இசட்.ஆர். சாலியும் ஒருவராவார்.

மலாய் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இலங்கை இராணுவத்தில் மேஜர் ஜெனரலாக நியமிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

இலங்கை இராணுவத்தில் 1980 ஆம் ஆண்டு இணைந்த மேஜர் ஜெனரல் சாலி, போரின் இறுதிக்காலகட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவராவார்.

இலங்கை இராணுவத்தின் ஆயுத்தளபாடப் படைப்பிரிவை சேர்ந்த பிரிகேடியர் ஆர்.வி. உடவத்த மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற நடத்தப்பட்ட ரிவிரெச இராணுவ நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியவர். தற்போது 54ஆவது டிவிசன் தளபதியாக உள்ள பிரிகேடியர் மைத்ரி டயசும் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளார்.

ஆனையிறவு இராணுவ தளம் விடுதலைப் புலிகளால் 1991ஆம் ஆண்டு முற்றுகையிடப்பட்ட போது, அதற்குள் அகப்பட்டிருந்தவர்களில் இவரும் ஒருவராவார். (அ–2)

## ஆண்வேடத்தில் தலைமறைவாக இருந்த பெண் சிப்பாய்கள் கைது

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இரண்டு பெண்களை காலி மாவட்டம் இமதுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆண்களைப் போன்று வேடமிட்டு வீடொன்றில் தங்கியிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பெண்ணொருவர் மட்டும் தனித்திருக்கும் வீடொன்றில் இவர்கள் அறையொன்றை வாடகைக்கு எடுத்து வசித்து வந்துள்ளனர்.

மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாவை வாடகையாக செலுத்தி வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இந்த பெண்களில் ஒருவர் வீட்டில் தங்கியிருந்ததுடன், மற்றைய பெண் பிரதேசத்தில் கூலி தொழில், வர்ணம் பூசுதல், தேயிலை மற்றும் கறுவாத் தோட்டங்களில் வேலை செய்து வந்துள்ளார்.

வெளித் தோற்றத்தில் இவர்களை பெண்கள் என அடையாளம் காணமுடியாது என பொலிஸார் கூறினர். அத்துடன் ஏனையோர் மத்தியில் தம்மை ஆண்களாக வெளிக்காட்டி வந்துள்ளனர்.

இந்தப் பெண்கள் கோதாகொட மற்றும் திக்வளை பிரதேசங்களை சேர்ந்தவர்கள். இராணுவத்தில் இருந்து தப்பி வந்த இவர்கள் ஏன் பெண்ணொருவர் தனியாக இருக்கும் வீட்டில் அறையொன்றை எடுத்து தங்கியிருந்தனர் என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ–2)

## வாக்காளர் இடாப்பு குறித்து 150 ஆயிரம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தொடர்பாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இருந்தே அதிகளவிலான மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் கூறியுள்ளார்.

அந்த மேன்முறையீடுகள் தற்போது மாவட்ட செயலக மட்டத்தில் பரிசீலிக்கப்பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களார் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படாமை, விலாசம் உரிய முறையில் குறிப்பிடப்படாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள தொடர்பில் மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதாகவும் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு எதிர்வரும் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. (அ–2)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

654

## எங்கேடா போன?



சரண், வரண் இருவரும் ஒரே பள்ளி யில் படிக்கும் மாணவர்கள். சரண் மிகவும் பணக்கார வீட்டுப்பிள்ளை. வருணோ மிகவும் ஏழை. சரண் தினமும் பள்ளிக்கு காரில்தான் வருவான். வருணோ வெகு தூரத்தில் இருந்து நடந்தே வருவான். இப்படி இருவருக்கும் ஏற்றத் தாழ்வு இருந்தாலும் இருவரும் மனதளவில் இணைந்த நல்ல நண்பர்களாகவே இருந்தனர்.

இதைக் கண்டு அந்தப் பள்ளியின் மாணவர்களும் ஆசிரியர்களும் பலமுறை வியப்படைந்து இருக்கின்றனர. ஒருமுறை வருணின் அம்மாவிற்கு உடல் நலம் சரியில்லாமல் போய் விட்டது. வீட்டின் அருகில் ஒரு மருத்துவர் இருந்தார். அவர் வருண் உன் அம்மாவிற்கு மிகவும் பொல்லாத காய்ச்சல் வந்துள்ளது. இவர்களை குணப்படுத்த தாராளமான மருந்து மாத்திரைகளையும் ஊசிகளையும் வாங்க வேண்டும். அதற்கு ஏறக்குறைய ஐந்நூறு ரூபாய்கள் தேவைப் படும். அவற்றை நீ வாங்கித் தரா விட்டால் உன் அம்மாவை வெகுவாக குணப்படுத்த முடியாது என்று கூறிவிட்டார்.

பாவம் வருணுக்கு அப்பாவும் இல்லை. என்ன செய்வான். பள்ளிக்குச் சென்று மாலை நேரத்தில் ஒரு புத்தகக் கடையில் வேலை பார்த்தான். அந்தக் கடையில் கடனாக பணம் கேட்டுப்பார்த்தான். ஆனால், சிறிய பையனான வருணை நம்பி ஐந்நூறு ரூபாயைத் தர கடை முதலாளி மறுத்துவிட்டார். வேதனைப்பட்ட வருண் மறுநாள் பள்ளிக்குச் சென்றான். நண்பன் முகம் வாடியிருப்பதைக் கண்ட சரண் விபரம் கேட்டு மனம் வருந்தினான். ஆனால், அவன் பெற்றோர் வருணுக்காக தனக்கு ஐந்நூறு ரூபாய் தரமாட்டார்கள் என்று நன்கு உணர்ந்தான்.

தன்னிடமும் வருணுக்கு உதவும் அந்த அளவிற்கு பணம் இல்லை என்பதை உணர்ந்தான். மிகவும் மனம் நொந்தபடி மாலையில் வருணின் வீட்டிற்குச் சென்றான். வருண் அம்மாவைப் பார்த்தான். வெகுநேரம் அவனோடு அவன் வீட்டிலேயே இருந்தான். இருட்டிவிட்டது. எத்தனை தடவை கூறியும் சரண் புறப்படவே இல்லை.

அன்று இரவு நண்பன் வீட்டிலேயே தங்கிவிட்டான். அதற்குள் சரணின் பெற்றோர் அவனைத் தேடத் துவங்கிவிட்டனர். அன்று மாலையே செய்தித் தாள்களுக்கு செய்தி தந்து சரணை கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு பரிசு தரப்படும் என்றும் அறிவித்து விட்டனர்.

மறுநாள் விடிந்தது. வருணை கூட்டிக் கொண்டு தனது வீட்டிறக்குப் புறப்பட்டான் சரண். நான் என் பெற்றோரிடம் என்ன கூறினாலும் நீ மறுத்து எதுவும் பேசக்கூடாது என வருணை கேட்டுக் கொண்டான். பின்னர் இருவரும் சரணின் வீட்டிற்குச் சென்றனர்.

மகனைக் கண்ட அவனது பெற்றோர் மிகவும் மகிழ்ந்தனர். தங்களது மகனைக் கட்டி அணைத்து முத்தம் இட்டனர். நேற்று இரவு எங்கே சென்றாய் என்று அம்மா கேட்டார்.

அம்மா! நான் பிழைத்து இன்று உங்கள் முன்னே உயிருடன் நிற்பதே இந்த வருணின் உதவியால்தான். நான் நேற்று மாலை பள்ளிவிட்டு வீட்டிற்கு வந்த போது எதிரில் ஒரு திருடன் வந்தான். அவனைக் கண்டு மிகவும் பயந்தேன். ஆனால், அவன் மிகுந்த அன்புடன் என் அருகில் வந்து எனக்கு ஒரு மிட்டாய் தந்தான். அதைத் தின்றதும் எனக்கு தலை சுற்றிவிட்டது. அடுத்த நிமிடம் அவன் என் கழுத்தில் கிடந்த சங்கிலியை அவிழ்த்துக்கொண்டு என்னைக் கொல்லப் பார்த்தான். பயத்தில் நான் மயங்கி விட்டேன். ஆனால், அந்த வழியாக வந்த என் நண்பன் வருண் திருடனிடம் இருந்து என்னைக் காப்பாற்றி என் சங்கிலியையும் பறித்துக்கொண்டு சத்தம் போட்டு இருக்கிறான். அடுத்த நிமிடம் திருடன் ஓடிவிட்டான்.

ஆனால் நான் மயக்கமாகிவிட்டதால் என்னிடம் நம் வீட்டு விலாசத்தைக் கேட்ட முடியவில்லை. என்னைத் தனது விட்டுக்குக் கூட்டிப்போய் தங்க வைத்திருக்கிறான். என் மயக்கம் தெளிந்ததும் என்னைக் கூட்டி வந்தான் என்று கூறினான்.

தக்க சமயத்தில் என் உயிரைக் காப்பாற்றிய என் நண்பனின் தாயாருக்கு உடல் நலமில்லை. அந்த அம்மாவின் உயிரைக் காக்க மருத்துவம் செய்வது உங்கள் பொறுப்பு என்றும் கேட்டுக்கொண்டான்.

சரணின் பெற்றோரும் மனம் உவந்து மருந்து மாத்திரைகளை வாங்கித் தந்து வருணின் தாய் உயிரைக் காப்பாற்றினர். அவங்க அம்மாவுக்கு தங்கள் கம்பெனியிலேயே ஒரு வேலையும் கொடுத்து தங்குவதற்கு ஒரு வீடும் கொடுத்தனர். வருணும் அவன் தாயாரும் இன்பமாக வாழ்ந்தனர். தன் பெற்றோர்களிடம் பொய் கூறினாலும் அந்தப் பொய்யால் தன் நண்பனின் அம்மா உயிரைக் காப்பாற்றியதில் மகிழ்ச்சி அடைந்தான் சரண்.

★★★★★★★★★★★★★★

### எனக்கொரு தாய்...



பக்கத்து வீட்டு
பாட்டி கேட்டாள்,
என்ன குழந்தை
யடி பெற்றாய்?
நான்சொன்னேன்
பெண் குழந்தை
யென்று...
பாட்டி சொன்னாள்
உனக்கொரு தாய் பிறந்துவிட்டாளடி!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2013
02

- 1755-ஐக்கிய இராச்சியத்தின் இரண்டாவது எடிஸ் டோன் கலங்கரை விளக்கம் தீ விபத்தில் அழிந்தது
- 1804-பாரிசில் நெப்போலியன் பொனபார்ட் பிரான்சின் பேரரசனாக முடிசூடினான்.
- 1843-யாழ்ப்பாணத்தில் கடும் சூறாவளி வீசியதில் பலத்த அழிவுகள்.
- 1848-முதலாம் பிரான்ஸ் ஜோசப என்பவன் ஆஸ்திரியாவின் பேரரசன்ஆனான்.
- 1851- புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரெஞ்சுத் தலைவன் சார்ல்ஸ் லூயி பொனபார்ட் இரண்டாம் குடிரசைக் கலைத்தான்.
- 1852-மூன்றாம நெப்போலியன் பிரான்சின் பேரரசன் ஆனான்.
- 1908-பூயி தனது இரண்டாவது அகவையல் சீனாவின பேர்ரசனாக முடிசூடினான்.
- 1946- பிரித்தானிய அரசாங்கம் நேரு, பால்தேவ் சிங், ஜின்னா, மற்றும் லியாகத் அலிகான் ஆகிய தலைவர்களை இந்தியாவின் சட்ட சபையைப் பிரதிநிதித்துவப்படுத்த அழைத்தது.
- 1947- பாலஸ்தீன நாட்டைப் பிரிக்க ஐ.நா. சபை எடுத்த முடிவை அடுத்து ஜெருசலேமில் கலவரம் வெடித்தது.
- 1954-சீனாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் வாஷிங்டன் டிசியில் கைச்சாத்திடப்பட்டது.
- 1956-பிடல் காஸ்ட்ரோ, சேகுவேரா மற்றும் ஆதரவாளர்களும் கியூபா புரட்சியை முன்னெடுப்பதற்காக கிரான்மா என்ற படகில் கியூபாவை சென்றடைந்தனர்.
- 1961-பிடெல் காஸ்ட்ரோ தன்னை ஒரு மார்க்சிச-லெனினிச வாதி எனவும கியூபா கம்யூனிச நாடாக இருக்கும் எனவும் அறிவித்தார்.
- 1971-அபுதாபி, புஜெய்ரா, ஷார்ஜா, துபாய் மற்றும் உம் அல் குவைன் ஆகியன இணைக்கப்பட்டு ஐக்கிய அரசு அமீரகம் என்ற ஒரே நாடாக ஆக்கப்பட்டது.
- 1971-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து ஐக்கிய அரபு அமீரகம் விடுதலை பெற்றது.
- 1975-பத்தே லாவோ என்பவர் லாவோசின் ஆட்சியைப் பிடித்து லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசை அமைத்தார்.
- 1976-பிடெல் காஸ்ட்ரோ கியூபாவின் அரசுத் தலைவரானார்.
- 1980- எல்சல்வடோரில் நான்கு ஐக்கிய அமெரிக்க கன்னியாஸ்திரிகள் சுட்டுக் கொலை செய்யப் பட்டனர்.
- **1988-பெனாசீர் பூட்டோ பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமரானார்.**
- 1993-ஹபிள் விண்வெளித் தொலைநோக்கியைத் திருத்தும் நோக்கோடு நாசாவின் எண்டெவர் விண்ணோடம் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2005-போதைப்பொருள் கடத்தல் குற்றத்துக்காக ஆஸ்திரேலியரான வான் துவோங் நியூவென் சிங்கப்பூரில் தூக்கிலிடப்பட்டார்.
- 2006-பரிதிமாற் கலைஞரின் நூல்கள் தமிழக அரசினால் நாட்டுடமை ஆக்கப்பட்டன.

### பிறப்புக்கள்

- 1910-ரா.வெங்கட்ராமன், இந்தியாவின் 8 ஆவது குடியரசுத் தலைவர்
- 1979-அப்துல் ரசாக், பாகிஸ்தான் முன்னாள் துடுப்பாட்ட வீரர்
- 1982- முருகதாசன், தீக்குளித்து உயிரிழந்த ஈழத் தமிழன் (இ.2009)

### இறப்புக்கள்

- 1552-புனித பிரான்சிஸ் சேவியர், ரோமன் கத்தோலிக்க மிஷனறி (பி.1506)
- 1933-ஜி.கிட்டப்பா, நாடக நடிகர்
- 2006- வீ. துருவசங்கரி, இலங்கையின் அறிவியலாளர் (பி.1950)

### சிறப்பு நாள்

ஐக்கிய நாடுகள்- அடிமைத்தனத்தை அழிக்கும் சரவதேச தினம்

### பெனாசீர் பூட்டோ



பெனாசீர் பூட்டோ பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராக இருந்த ஒரு பாகிஸ்தான் அரசியல் வாதியாவார். இவர், ஒரு முஸ்லிம் அரசை தலைமை தாங்கி நடத்தி செல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெண்மணி ஆவார்.

இவர் பாகிஸ்தானின் பிரதமர்ராக இருமுறை பதவி வகித்தார். அத்துடன் பாகிஸ்தானின் முதல் மற்றும் இன்றுவரையிலும் ஒரே பெண் பிரதமராவார்.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி பாகிஸ்தான்- ராவல்பிண்டியில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஒரு பேரணியில் புறப்பட்டபோது அவர் படுகொலை செய்யப்பட்டார். அதற்கடுத்த ஆண்டு மனித உரிமைகள் துறையில் ஐக்கிய நாடுகள் சபை விருதைவென்ற ஏழு வெற்றியாளர்களில் ஒருவராக இவரின் பெயர் பட்டியலிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலெக்ஸாண்டரா நீங்கள்?



ஆன்மீகம் 55

**நா**ம் ஒவ்வொருவரும் நமக்கு என்ன தேவை என்று தெரியாமல், எப்போதும் எதையோ தேடிக் கொண்டிருக்கிறோம். இது முடிவில்லாமல் போய்க்கொண்டே இருக்கிறது. இந்தத் தேடலை எப்படி முழுமையடையச் செய்வது?

ஒரு மனிதன் தன்னை உணரும் போதுதான் உள்நிலையிலும் வெளிநிலையிலும் முழுமையடைகிறான். அதுவரை அது வேண்டும், இது வேண்டும் என்று பிச்சைக்காரன் போல ஏங்கிக் கொண்டிருக்கிறான். நினைத்தது கிடைத்தாலும் பின்னர் வேறொன்றிற்காக ஏங்க ஆரம்பித்து விடுகிறான்.

அவனுடைய ஏக்கம் மூச்சு நிற்கும்போது கூட பூர்த்தியாவதில்லை. நாளை என் வாழ்க்கை முழுமையடையும் என்ற நினைவிலேயே இறுதிவரை வாழ்ந்துபோகிறான்.

16 வயதில் ஆரம்பித்து 32 வயதிற்குள் பாதி உலகத்தை வென்ற பின்னரும்கூட, 'அலெக்சாண்டர் இன்னமும் பாதி உலகம் வெல்லவில்லையே என்ற ஏக்கத்தோடுதான் இறந்தான். தன் ஆசைக்காக அப்பாவி மனிதர்களை 16 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தும் அவனிடம் அறிவு வெளிப்படவில்லை.

அவனை நீங்கள் அலொக்சாண்டர் தி கிரேட் என்று அழைக்கிறீர்கள்.



பாடப்புத்தகங்கள் மூலமாக உங்கள் குழந்தைகளுக்கும் அப்படி போதிக்கிறீர்கள். மக்களின் நலனுக்கு அவன் என்ன செய்தான் சொல்லுங்கள்! துரதிர்ஷ்டவசமாக உங்கள் சிந்தனை அந்த வழியில்தான் செல்கிறது.

ஒவ்வொருவரும் மனதளவில் அலெக்சாண்டராகத்தான் இருக்கிறீர்கள். ஆனால், நிறைவேற்றிக்கொள்ளும் தைரியம் இல்லாமல் இருக்கிறீர்கள். இப்படி நீங்கள் அலொக்சாண்டராக இருக்கும்வரை ஒவ்வொருவரையும் ஏதாவது ஒரு வழியில் துன்புறுத்தித்தான் விருப்பப்பட்டதை அடைய வேண்டும் என்ற நோக்கம் இருக்கும் வரை வலியும் துன்பமும்தான் இந்த உலகத்தின் வழியாக இருக்கும். இப்படித்தான் உங்கள் விழிப்புணர்வு இருக்குமேயானால் உங்கள் செயல்கள் இந்த நோக்கில்தான் அமையும் என்றால் இந்த உலகம் அழகானதாக இருக்க முடியாது.

உங்கள் வரலாற்றுப் புத்தகங்களில் கூட அலொக்சாண்டருக்கு பல பக்கம் ஒதுக்கப்படுகிறது. ஆனால், மனித நலனுக்காகவே உழைத்த ஞானமடைந்த புத்தருக்கோ சில வரிகள் மட்டுமே. அதுவும் கூட அவன் ஒரு அரசனாக இருந்தான் என்ற காரணத்திற்காக மட்டுமே.


உண்மையில் உங்கள் நோக்கம் மனித நலனை நோக்கித்தான் முழுமையாக இருக்க வேண்டும். எப்போது உங்களை முழுமையாக உணர்கிறீர்களோ அப்போது உங்கள் நோக்கம் மற்றவர் நலன் குறித்தே இருக்கும். எனவே, உங்கள் எண்ணமும் செயலும் உணர்தலை நோக்கியே மாற வேண்டும் என விரும்புகிறேன். அதற்கு எனது ஆசிகள் எப்போதும் இருக்கும்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# அச்சுறுத்த வரும் போர்க்குற்ற விசாரணைகள்

# மிலோசவிச் கற்றுத் தந்த பாடம்



**ஸ்**லோபோடன் மிலோசவிச். 1989 முதல் 1997 வரை சேர்பியாவின் ஜனாதிபதியாகவும், 1997 முதல் 2000 வரை யூகோஸ்லாவியாவின் ஜனாதிபதியாகவும் இருந்தவர். இவர் யூகோஸ்லாவியா நாட்டின் பொஸ்னியா ஹேர்ட்ஸகொவினா மக்களுக்கெதிராக யுத்தத்தினை மேற்கொண்டது மட்டுமன்றி அப்பிரதேசத்தில் வாழ்ந்த பொஸனிய முஸ்லிம்கள் முகம் கொடுத்த இனச் சுத்திகரிப்பின் சூத்திரதாரி எனவும் கருதப் படுபவர்.

நான்கு வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்த இந்த யுத்தம் கிட்டத்தட்ட 68,000 பொஸ்னிய முஸ்லிம்களைக் காவு கொண்டது. அவர்களின் சமூகத்தைச் சேர்ந்த 25,000க்கு மேற்பட்ட பெண்கள் திட்டமிட்ட பாலியல் வல்லுறவுக்குள்ளாவதற்கான காரணமாகிற்று. 44 மாதங்கள் பொஸ்னியாவின் தலைநகரமான சாராயெவோ முற்றுகையிடப்பட்டிருந்தது. இங்கு உணவும் மருந்துமின்றி இறந்தவர்கள் ஏராளமானோர். ஏனையோர் தொடாந்த ஷெல்லடிகளில் இறந்தனர். ஸ்ரெப்ரனிகா படுகொலை போன்று பல படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. ஐரோப்பாவிற்கு நடுவே, இவ்வளவு நீண்டகாலம் நிகழ்ந்து வந்த அழிவினைத் தடுத்து நிறுத்துவதில் மேற்குலக நாடுகள் மிகுந்த தயக்கம் காட்டின. பொஸ்னியாவில் வாழ்ந்த ஐரோப்பிய முஸ்லிம்கள் அழிவதில் மேற்கு நாடுகளின் நலனும் உள்ளடங்கியிருந்தது என்பது அன்றைய பல அரசியல் அவதானிகளின் கருத்தாக இருந்தது. கடைசியில் நேட்டோ அமைப்பு ஒருவகையாக தலையை நுழைத்து யுத்த நிறுத்தத்தினை ஏற்படுத்தியது மட்டுமல்ல, மிலோசவிச்சை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிலையில் போர்க்குற்ற விசாரணைகளுக்காக நிறுத்தியது. இந்த வழக்கில் மிலோசவிசசுக்கு எதிரான சாட்சியங்களில் அனேகமானவை அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏயினால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கிட்டத்தட்ட தென்னாசியப் பிராந்தியத்தைப் போலவே, ஐரோப்பாவும் ஏராளமான சிறுபான்மைத் தேசியங்கள் வாழும் பிரதேசமாகும். தேசிய அரசு தோன்றிய காலந்தொட்டு கடந்த ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக அது பல யுத்தங்களைக் கண்டதும் இக்காரணத்தினால்தான். காலப்போக்கில் ஒவ்வொரு தேசியங்களும் மெல்ல மெல்ல ஒவ்வொரு விதமான சுயாட்சியைப் பெற்றுக்கொண்டு செல்ல, கம்யூனிஸ நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகளே இன்னமும் பழைய ஒற்றையாட்சியை தக்கவைத்திருந்தன.

சோவியத் யூனியனின் உடைவுடன் அதன் கீழிருந்த தேசியங்கள் ஒவ்வொன்றும் பிரிந்து சுயாட்சி பெற்றுக்கொண்டு வந்தன. இந்தப் போக்கில் யூகோஸ்லாவியா சோவியத் யூனியனின் சாம்ராச்சியத்தின் கடைசி அத்தியாயம் என்று கூறலாம். சோவியத் யூனியனும் அதன் செயற்கைக்கோள் அரசுகளும் உடைந்து பலவீனமாக வேண்டும், அங்கு கம்யூனிஸம் மீண்டும் தலையெடுக்க விடக் கூடாது என மேற்குலக நாடுகள் உறுதிபூண்டதால் எங்கெல்லாம் தோன்றினவோ அங்கெல்லாம் தனிநாட்டுக் கோரிக்கைகளுக்கு அவை உடனடி ஆதரவு வழங்கின.

1989 முதலான அந்த நாட்களில் ஒவ்வொரு வருடமும் எமது [illegible] வரையப்படவேண்டிய தேவை இருந்தது. பிரதானமான ஐந்து தேசியங்களை உள்ளடக்கியிருந்தது முன்னைய யூகோஸ்லாவியா. இங்கும் சோவியத் யூனியனின் செல்வாக்கு மழுங்கவாரம்பிக்க, அதனால் மத்திய அரசு பலவீனமாக, அங்குள்ள தேசியங்களெல்லாம் தமக்கென சுயாட்சியினைக் கோர ஆரம்பித்தன. மிலோசவிச் அதிகாரங்களை மத்தியப்படுத்தி ஒரு சர்வாதிகார அட்சியை ஸ்தாபிக்க முயன்றதும் இங்கு பிரிவினை கோரிக்கைகள் எழுந்ததற்கான இன்னுமொரு காரணமாகும். இதனால் 1992 முதல அங்கு வாழ்ந்த அல்பேனியர்களுடனும் பின்பு பொஸ்னியர்களுடனும் யுத்தம் மூண்டது. 1997ம் ஆண்டு சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு யூகோஸ்லாவியக் குடியரசு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக மிலோசவிச் தெரிவு செய்யப்பட்டார்தான், ஆயினும், சமாதான உடன்படிக்கை தனது நிபந்தனையின் அடிப்படையில்தான் செயற்படுத்தப்பட வேண்டும் என்கின்ற கொள்கையை அவர் இறுகப் பற்றியிருந்தார். முழுமையான அதிகாரப் பகிர்வினை எதிர்த்தார். அவர் பெரும்பான்மையினத்தவரான சேர்பியர்களின் தேசிய வாதத்தின் சின்னமாகத் திகழ்ந்ததனால், பொஸ்னிய யுத்தத்துக்குப் பின் அவர்கள் மத்தியில் மிகுந்த பிரபல்யம் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மிலோசவிச் சோவியற் ரஷ்யாவினை ஆதரித்து அதன் அணியில் இருந்ததுதான் அவர் மேற்கு நாடுகளுக்கு இவ்வளவு உறுதியாக எதிர்ப்பு தெரிவிப்பதற்கான காரணமாகும். யூகோஸ்லாவியாவின் உடைவினையும், அதன் பின்பு தோன்றுகின்ற புதிய நாடுகள் தனது செல்வாக்கின் கீழ் இயங்க வேண்டும் எனவும் எதிர்பார்த்து நின்ற அமெரிக்காவிற்கும் அதன் கைப்பொம்மையான நேட்டோவிற்கும் இவருடைய கொள்கைகள் பெருந்தடையாயின. இப்பொழுது அவரை வைத்திருப்பது அமெரிக்க நலன்களுக்குப் பிரதிகூலமானதாக (liability) மாறியது.

2000ம் ஆண்டு மிலோசவிச்சுக்கு எதிரான கிளர்ச்சிகள் சேர்பியாவில் உருவானை. இக்கிளர்ச்சிகளின் பின்னணியில் [illegible] இருந்ததாகப் பல அரசியல் கட்சிகளின் வாக்குமூலங்கள் தெரிவிக்கின்றன. இப்பொழுது மத்தியகிழக்கில் அது செயற்படுத்துவதுபோல இங்கும் அல்பேனிய இராணுவக் குழுக்களை ஆதரித்து மிலோசவிச்சின் ஆட்சிக்கு எதிராகத் தொழிற்படுமாறு உருவாக்கியது சி.ஐ.ஏ. அந்த ஆண்டு மிலோசவிச்சின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அடுத்தடுத்த வருடங்களிலேயே அவர் போர்க்குற்ற விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டார்.

மிலோசவிச்சுக்கு எதிரான இப்போர்க் குற்ற விசாரணைகள் ஒரு வகையில் பார்த்தால் ஓர் வரலாற்று நிகழ்வே. பாலியல் வன்செயலானது யுத்தத்தின் பக்க விளைவல்ல என்றும் அது போரில் உபயோகிக்கப்படும் ஒரு ஆயுதம் என அதனை ஒரு போர்க்குற்றமாக சட்டரீதியாக ஒரு சர்வதேச நீதிமன்றம் விபரித்தது இங்குதான் முதல் தடவையாகும். பல வருட காலங்களாக உலகெங்குமுள்ள பெண்கள் அமைப்புக்கள் இது தொடர்பாக மேற்கொண்ட போராட்டங்கள் இங்குதான் வெற்றி கண்டன. கடைசியில், வழக்கு முடிவடையும் முன்னரேயே மிலோசவிச் 2006ஆம் ஆண்டு சிறையில் மாரடைப்பினால் இறந்தார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவும் கிட்டத்தட்ட மிலோசவிச்சின் நிலையில் அகப்பட்டிருக்கின்றார் என்றுதான் கூற வேண்டும். பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், போர்க்குற்ற விசாரணைகளுக்காக 2014ம் ஆண்டு மார்ச் வரை காலக்கெடு விதித்துப் போயிருக்கின்றார். இம்மாதிரியான கெடுபிடியான அறிவிப்பு அமெரிக்காவின் ஒப்புதலின்றி நிச்சயமாக வெளியிடப்பட்டிருக்க முடியாது.

அமெரிக்காவையும் மேற்குலக நாடுகளையும் பொறுத்தவரை, சீனாவின் செல்வாக்குப் புலத்தில் முழுமையாக நிற்பதனால் இலங்கை இசக்கு பிசக்காக நடக்க ஆரம்பித்துள்ளது எனக் கருதப்படுகின்றது. மிலோசவிச்சுக்கு ரஷ்யா எப்படியோ இலங்கைக்க சீனா அப்படியே.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் கக்கும் அமைச்சர்கள் உள்ள தெரிவுக்குழுவில் எப்படி பங்கேற்பது

## ஊடக அமைச்சரின் கருத்துக்கு அரியம் எம்.பி.பதில்



(கொழும்பு)

**தமிழ் மக்களின் 66 வருட போராட்ட வரலாறு பற்றி அறிந்திராத தற்போதைய அரசாங்க ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தமிழர் தொடர்பான வரலாறுகளை அறிந்து கொண்டு அறிக்கைகளை விட வேண்டும் என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கருத்துரைத்துள்ளார்.**

ஊடகத்துறை அமைச்சர் அண்மையில் ஊடகங்களுக்கு வழங்கிய செய்தி தொடர்பாக காருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் இதுதொடர்பாக கருத்துக் கூறுகையில்,

தமிழர்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உகந்த இடம் பாராளுமன்றம்தான் என இந்த அமைச்சர் நகைப்பாக கூறியிருப்பதன் மூலம் இதுவரைகாலமும் இவர் எமது வரலாறு தெரியாமலே இருந்திருக்கின்றார் என எண்ணத் தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் ஏகோபித்த தமிழ்த் தலைவர்களாக திகழ்ந்த தந்தை செல்வா தொடக்கம் இன்று எம்மினத்தலைவராக இருக்கின்ற சம்பந்தன் வரைக்கும் 66 வருடங்களாக இந்த பாராளுமன்றத்தின் மூலம் அனைத்துத் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இறுதித்தீர்வு கிடைக்கும் என்றுதான் நம்பி எதிர்பார்த்து ஏமாந்துபோயினர்.

அன்று எமது பெரும் தலைவர்களினால் செய்யப்பட்ட டட்லி-செல்வா ஒப்பந்தம், பண்டா- செல்வா ஒப்பந்தம் என பல செயல் உருப்பெறாத ஒப்பந்தங்களை பார்த்திருக்கின்றோம். இறுதியில் எந்த ஒப்பந்தத்திலும் தமிழருக்கான தீர்வு கிடைத்தபாடில்லை.

இந்தப்பாராளுமன்றத்திலே தமிழர்கள் தொடர்பாக இதுவரைக்கும் அரசாங்கங்களினால் முன்வைக்கப்பட்ட தீர்வுகள் எவை, அதற்காக எவ்வாறான போராட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள் என்பது தொடர்பான தகவல்களை படித்த பின்னரே ஊடகத்துறை அமைச்சர் தகவல்களை வெளியிட வேண்டும். அதைவிடுத்து எடுத்த எடுப்பிலே கருத்துக்கள் கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.

யுத்தத்தை முடித்து விடுதலைப் புலிகளை அழித்துவிட்டோம் என்று கூறிய அரசாங்கம் 2010.04.08 ஆம் திகதி பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தியிருந்தது.

அந்தத் தேர்தலில் வடகிழக்கு மாகாணத்திலே தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சி த.தே. கூட்டமைப்புத்தான் என்பதை ஒட்டுமொத்த தமிழினமும் நிரூபித்திருந்தது.

இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டும் என்று எண்ணிய அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு தைமாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரைக்கும் 18 சுற்று பேச்சுவார்த்தைகளை எம்முடன் நடத்தியிருந்தது.

அதிலும் குறிப்பாக மார்ச் மாத நடுப் பகுதியில் எமது மக்களின் அரசியல் தீர்வு தொடர்பான எழுத்து மூல ஆவணம் ஒன்றையும் இந்த அரசாங்கத்திற்கு வழங்கியிருந்தோம்.

அதற்கு எந்தவிதமான பதிலும் தராமல் அதனை கருத்தில் எடுக்காது தூக்கி குப்பைக் கூடைக்குள் போட்ட வரலாறே இந்த அரசாங்கத்திடம் இருந்தது. இதனை அறியாத இனவாத அமைச்சர்கள் த.தே.கூட்டமைப்பை தெரிவுக்குழுவிற்கு வருமாறு அழைப்பது எந்த விதத்தில் பொருத்தமுடையது என்பததை மனச்சாட்சி உள்ள ஒவ்வொரு அமைச்சர்களும் புரிந்து கொண்டிருப்பார்கள்.

நடந்து முடிந்த அனைத்துத் தேர்தல்களிலும் தன்னை பெரும்பான்மையான மக்கள் தெரிவு செய்ததாகவும் அவர்களுக்காக வேண்டி தாம் சேவை செய்யவேண்டும் எனவும் ஜனாதிபதியே கூறியிருக்கின்றார்.

அதே போன்றுதான் நாங்களும் கூறுகினறோம். வடகிழக்கில் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் த.தே.கூட்டமைப்பினரையே பெருமபான்மையான மக்கள் ஆதரித்திருக்கின்றார்கள்.

ஆகவே அவர்களுடைய எதிர்கால அரசியல் அபிலாஷைகளை தீர்த்து வைக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் காலத்தின் கட்டாயமாகும் என்பதை இவ்வாறான அமைச்சர்கள் அறிந்திருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் தீர்வு கிடைக்கும் என்று கூறும் இந்த அமைச்சர் பாராளுமன்றத்தில் எமது கட்சியினர் உரையாற்றுகின்ற வேளையில் சுதந்திரமாக உரையாற்ற முடியாமல் குறுக்கீடுகள் செய்வதற்கென்று ஒருதொகை ஆளும்தரப்பு உறுப்பினர்களை பயிற்சி கொடுத்து வைத்திருக்கின்றனர். இதனை இந்த ஊடகத்துறை அமைச்சர் கண்டுகொள்ளவில்லையா?

புனிதமான இடமென்று தெரிந்தும் பாராளுமன்றத்திலேயே இப்படி புனிதம் கெட்டு செயற்படும் அமைச்சர்கள் இருக்கும் போது எப்படி தெரிவுக்குழுவிற்கு எமது கட்சி பங்கு பங்குபற்றுவது.

பங்கு பற்றினாலும் இனவாதத்தைக் கக்கும் அமைச்சர்கள் உள்ள இந்தக்குழுவில் தமிழர்கள் தொடர்பாக எதைப்பேச விடப்போகிறார்கள்; எதனைத் தரப்போகின்றார்கள். மாறாக காலத்தை இழுத்தடித்து எம்மையும், சர்வதேசத்தையும் ஏமாற்றும் சதிவேலையிலேயே இறங்குவார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்றார். (அ-2)

## மாற்றுவலுவுடைய மாணவர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின விழா எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் சொர்ணாம்பிகை மண்டபத்தில் முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராசநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நொத்தாரிசும் சட்டத்தரணியுமான ஞான லோஜினி சிவஞானம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா, யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சண்முககுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## பாலியல் வன்முறை விவகாரம்; பதிலை எதிர்பார்க்கிறது பிரிட்டன்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறுகின்ற பாலியல் வன்முறைகளை தடுக்க உதவுவது குறித்து இலங்கையின் பதிலை எதிர்ப்பார்ப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வெளியுறவு செயலாளர் வில்லியம் ஹேக் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் பாலியல் வன்முறைகளை தடுக்க இலங்கைக்கு உதவமுடியும் என்று ஏற்கனவே இலங்கையின் வெளியுறவு அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் அவருடைய பதிலை தாம் எதிர்ப்பார்ப்பதாக ஹேக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில பாலியல் வன்முறைகள் குறித்த செய்திகள் நாள்தோறும் செய்தித்தாள்களில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந் நிலையில் பொதுநலவாய நாடுகளின் விழுமியங்களுக்கு ஏற்ப அவற்றை கட்டுப்படுத்த பிரித்தானியாவால் இலங்கைக்கு உதவ முடியும் என்று ஹேக் குறிப்பிட்டார். (அ-2)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைக்கு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா அண்மையில் சென்றிருந்தார். இதன்போது கல்வியமைச்சரை பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வி.கிருஷ்ணசிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவித்து நினைவுப் பரிசில் வழங்கியதைப் படத்தில் காணலாம். (படம்:- தும்பளை செய்தியாளர்)

## பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யா/வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி பு.சண்முகராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பாடசாலை கட்டட பரிசோதகர் பா.தியோயினஸ், கௌரவ விருந்தினராக திருமதி ர.பிருந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (செ)

## மீனவர்களை காணவில்லை

(கொழும்பு)

கடந்த வாரத்தில் கிழக்கு கடலில் காணாமற் போன 8 மீனவர்களும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட புயல் சின்னம் காரணமாக நீர்கொழும்பு மற்றும் தெய்வேந்திரமுனை ஆகிய இடங்களை சேர்ந்த இந்த மீனவர்கள் காணாமற் போயிருந்தனர்.

இந்தநிலையில் இந்திய கடலோரக் காவல் படையினருக்கும் இதுதொடர்பில் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இலங்கை கடற்படையினரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும்

### பிரான்ஸ் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முழுமையாக மரண தண்டனை ஒழிகப்பட வேண்டும் என்று பிரான்ஸ் கோரியுள்ளது.


இலங்கையின் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை அண்மையில் சந்தித்த பிரான்ஸ் தூதுவர் ஜீன் போல்மொன்சு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த நிலையிலேயே இலங்கையும் அதனை பின்பற்ற வேண்டும் என்று பிரான்ஸ் தூதுவர் கேட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 62 ஆவது அகவையில் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களை வாழ்த்துகின்றோம்



தியாகி அறக்கொடை நிறுவனத்தை தனது முற்றுமுழுதான நிதிப் பங்களிப்புடன் நல்லூரில் உருவாக்கி தனது குடும்பத்தைப் போலவே ஏனைய மக்களையும் வாழவைக்க வேண்டுமென்ற அவாவுடன் செயற்பட்டுசகல மக்களாலும் போற்றப்பட்டு வரும் திரு.வாமதேவா தியாகேந்திரன் இன்று 62ஆவது அகவையைக் கொண்டாடும் இந்நாளில் இவர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றோம். இவரினால் கடந்த காலத்தில் செய்யப்பட்ட அறப்பணியின் தொகுப்புகள்.



எமது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இலவச மருத்துவ சிகிச்சையினை இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத் தலைவர் கலாநிதி. ஏ.ரி.ஆரியரத்தினா அவர்கள் திறந்து வைக்கும் போது



எமது ஸ்தாபகரின் 58ஆவது பிறந்த நாள் விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த முன்னாள் அரசாங்க அதிபர் டீ.கணேஸ் அவர்கள் அழைத்து வரப்பட்ட பொழுது



எமது நிறுவன கட்டடத்திறப்பு விழாவினை முன்னாள் கௌரவ அமைச்சர் சந்திரசேகரம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டபொழுது



எமது ஸ்தாபகரின் மணிவிழாவில் முன்னை நாள் துணைவேந்தர் திரு.பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் பிரதமவிருந்தினராக அழைத்துவரப்பட்ட போது



எமது ஸ்தாபகரின் மணிவிழாவில் கலந்து கொண்ட கலை இலக்கிய பேரவைத் தலைவர் திரு. இரா. செல்வவடிவேல் அவர்கள் உரையாற்றும் போது



எமது நிறுவன 2ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு பிரதம விருந்தினராக முன்னாள் துணைவேந்தர் C. மோகனதாஸ் அவர்கள் அழைத்து வரப்பட்ட போது




கோயம்புத்தூர் இல்ல பிள்ளைகளுடன் எமது ஸ்தாபகர்



தென்பகுதியில் நடைபெற்ற எமது மாதாந்த உதவித்திட்ட ஆரம்ப விழாவின் போது பங்குபற்றியோர்



எமது TCT நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் சிறுவர் இல்ல பிள்ளைகள்



எமது நிறுவனத்தினால 25.6.2010. அன்று மலையகத்தில் ஆரம்பிக்கப்பட்ட மாதாந்த கல்வி உதவி முதியோருக்கான உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போது



அக்கரைப்பற்று பாடசாலை மாணவர்களுக்காக எமது நிறுவனத்தால் வழங்கப்படும் மாதாந்த கல்வி உதவி ஆரம்ப வைபவம்



எமது நிறுவனத்தின் உதவியினை பெறும் ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்கள்





எமது வைகறை நூல் வெளியீட்டின் போது பயனாளி ஒருவருக்கு முன்னாள் அரச சார்பற்ற நிறுவன இணையத்தின் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் அவர்களினால் மூச்சக்கரவண்டி வழங்கப்பட்ட போது



முல்லைத்தீவில் எமது நிறுவனத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முதியோர், மாணவர்களுக்கான மாதாந்த உதவி செயற்திட்டத்தினை கௌரவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மாணவர்களுக்கு கொடுப்பனவினை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்த போது



தென்பகுதியில் நடைபெற்ற எமது கல்வி உதவித்திட்டத்தின் போது கலாநிதி அமரர். ஜெயலத் ஜெயவர்த்தன அவர்கள் எமது பயனாளி ஒருவருக்கு கொடுப்பனவு வழங்கிய போது



எமது ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி சமூக ஜோதி என்னும் பட்டம் வழங்கப்பட்ட நிகழ்வு



பாரம்பரிய கைத்தொழில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது நிறுவனத்திற்கு வருகைதந்த பொழுது செயற்றிட்டங்கள் பற்றி எமது ஸ்தாபகர் விளக்கிக்கூறப்பட்டபோது



கொண்ட கலாநிதி அமரர் ஜெயலத் ஜெயவர்த்தன அவர்களும் முன்னை நாள் கௌரவ அமைச்சர் கரு ஜெயசூரியா அவர்களும்



செம்மணி இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு, இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது

தொகுப்பு

திரு.சி.மாணிக்கராசா ஆலோசகர்,
பிரதிக் கல்வி பணிப்பாளர்,யாழ்ப்பாணம்

(சி/5627)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது சூழும் கருமேகங்கள்

பிரித்தானியப் பிரதமர் டேவிட் - கெமரூன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி ஏசியன் லைட் இதழில் எழுதியுள்ள பிரத்தியேக பத்தி ஒன்றில் இலங்கை குறித்த தனது கடுமையான நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

2009 இல் முடிவுக்கு வந்த போரின் இறுதிக்கட்டத்தில் அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் தொடர்பாக, சுதந்திரமான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் நடத்த வேண்டும்.

2014 மார்ச் மாதத்துக்கு முன்னதாக இலங்கை அரசாங்கம் சுதந்திரமான விசாரணைகளை முன்னெடுக்கத் தவறினால் சர்வதேச விசாரணைக்கு பிரித்தானியா அழுத்தம் கொடுக்கும் என்று அவர் அதில் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இது பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் அண்மைக் காலத்தில் இலங்கைக்கு விடுக்கின்ற நான்காவது பகிரங்க எச்சரிக்கையாகும். கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க கொழும்பு புறப்பட சில நாட்கள் முன்னதாக அவர் இதுபோன்ற முதலாவது எச்சரிக்கையை விடுத்திருந்தார்.

பின்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலும் லண்டன் திரும்பிய பின்னர், பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின்போதும் அவர் இத்தகைய எச்சரிக்கையை விடுத்திருந்தார்.

கடந்த 12 ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையில் நடந்த வாக்கெடுப்பில், வரும் ஜனவரி முதலாம் திகதி முதல், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடாக பிரித்தானியா தெரிவு செய்யப்பட்டுள்ள சூழலில்தான், அவர் இந்த எச்சரிக்கைகளை விடுத்துள்ளார்.

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கொமரூன் இலங்கைக்கு எதிராக விடுத்துவரும் எச்சரிக்கைகளையும் அவரது இந்த நிலைப்பாட்டையும் தேர்தல் நலனுக்காக நீலிக் கண்ணீர் என்று இலங்கையின் அரச சார்பு ஊடகங்கள் பல விமர்சித்துள்ளன.

புலம்பெயர் தமிழர்களின் வாக்குக்களைப் பெறுவதற்காகவே, அவர் அவ்வாறு நடந்து கொள்வதாக சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த அரசாங்கம் முனைகிறது. ஆனால், டேவிட் கெமரூன் எத்தகைய காரணத்துக்காக இவ்வாறு கடும் போக்குடன் நடக்கத் தொடங்கியுள்ளார் என்பது முக்கியமானதல்ல.

அவர் என்ன செய்யப்போகிறார்- அவரால் என்ன செய்ய முடியும் என்பதே முக்கியமானது. ஏற்கனவே, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைககு எதிராக இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அவற்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உருப்படியான எந்த முயற்சிகளையும் முன்னெடுக்காத சூழலில் வரும் மார்ச் மாதம் தொடங்கவுள்ள 25 ஆவது அமர்வு மிகவும் முக்கியமானது.

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த மீறல்கள் குறித்து, நம்பகமான- நடுநிலையான- சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா போன்ற நாடுகள் இதுவரை வலியுறுத்தி வந்துள்ளன.

அதாவது, நம்பகமான உள்ளக விசாரணைப் பொறிமுறையையே இன்றும்கூட அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. ஆனால், பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் எடுத்துள்ள நிலைப்பாடு அமெரிக்காவின் தற்போதைய நிலையை விடவும் கடுமையானது.

நம்பகமான விசாரணைகளை அடுத்த நான்கு மாதங்களுக்குள் நடத்தத் தவறினால், சர்வதேச விசாரணைக்கு பிரித்தானிய அழுத்தம் கொடுக்கும் என்று டேவிட் கெமரூன் எச்சரித்துள்ளார்.

அவர் ஒன்றுக்கு நான்கு முறை, இந்தக் கருத்தைக் கூறியுள்ளார். புலம்பெயர் தமிழர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளார். ஊடகங்களிடம் கூறியுள்ளார். நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அதாவது, கிட்டத்தட்ட ஒரு வாக்குமூலம் போன்ற தனது பிரத்தியேகப் பத்தியில் எழுத்து மூலமும் அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அடுத்த ஜெனீவா கூட்டத்தொடர் என்பது, உள்ளக விசாரணைப் பொறிமுறை என்று இலங்கை அரசுக்கு கொடுக்கப்பட்ட கால அவகாசத்துக்கு அப்பாற்பட்டதாகவே அமையப்போகிறது. அதாவது, வரும் மார்ச் மாதத்துடன் பெரும்பாலும் போர்க் குற்றங்கள் குறித்த உள்ளக விசாரணை கோரும், சர்வதேச அழுத்தங்கள் அனைத்தும் ஓய்வுக்கு வந்து விடலாம்.

அதற்குப் பதிலாக பிரித்தானியா முன்வைத்துள்ள சர்வதேச விசாரணை என்ற விவகாரம் சூடுபிடிப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. பிரித்தானியா தனது நிலையிலிருந்து இனிமேல் பின்வாங்க முடியாது. வரும் மார்ச் மாதத்துக்குப் பின்னர் சர்வதேச விசாரணை அழுத்தங்களை கைவிட்டு உள்நாட்டு விசாரணைக்கு பிரித்தானியாவினால் வலியுறுத்த முடியாது.

எனவே, அடுத்த மார்ச் மாதம் நடக்கவுள்ள ஜெனீவா கூட்டத் தொடர், இலங்கைக்கு மிகப்பெரிய கண்டமாகவே அமையப்போகிறது. பிரித்தானியா மட்டும் இலங்கைக்குச் சிக்கலைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்றில்லை இந்தியாகூட இலங்கையின் காலை வாரி விடலாம் என்று



கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் ஊடகங்களிடம் தகவல் வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே பல்வேறு அழுத்தங்களின் மத்தியில்- வேண்டா வெறுப்பாகவே அமெரிக்கா கொண்டு வந்த இரண்டு தீர்மானங்களையும் இந்தியா ஆதரித்திருந்தது. அதற்கு தமிழ் நாட்டின் அழுத்தங்களே காரணமாக இருந்தன. ஆனால், அடுத்த ஜெனீவா கூட்டத் தொடரில் தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் ஏதும் அழுத்தம் கொடுக்காது போனாலும் இலங்கைக்கு எதிராக இந்தியா கடும்போக்கை வெளிப்படுத்தியே ஆக வேண்டிய நிலை உள்ளது.

அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஏற்கனவே இரண்டுமுறை இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை ஆதரித்த இந்தியா- அதற்குப் பின்னர், இலங்கை உரிய நடவடிக்கைகளை எடுத்துவிட்டது என்று தனது போக்கை மாற்றிக் கொள்ள முடியாது.

எதையுமே இலங்கை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகும்போது இந்தியா மட்டும் அதற்கு முரணாக நிற்க முடியாது. அவ்வாறு நிற்க வேண்டுமாயின், அதற்கு ஒரு வலுவான நியாயம் தேவை. அத்தகைய நியாயம் ஒன்றை முன்வைப்பதற்கு இலங்கை எதையுமே செய்திருக்கவில்லை.

அடுத்தது, வரும் அடுத்த ஆண்டு மே மாதத்துக்குள் இந்திய நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். பெரும்பாலும் ஏப்ரல் மே மாதங்கள் தேர்தல் காலமாக அமையலாம்.

இந்த நிலையில் வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் எத்தகைய தீர்மானத்தையும் தோற்கடிக்க இந்தியாவினால் எத்தனிக்க முடியாது. அது தமிழக வாக்காளர்களுக்கு கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தும்.

வரும் தேர்தலில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டாலும் சரி, கூட்டணி அமைத்துக் கொண்டாலும் சரி, தேர்தல் காலத்தில் இலங்கைக்கு ஆதரவாக களமிறங்கி தனது வாக்கு வங்கிக் கோட்டைவிட காங்கிரஸ் தயாராக இருக்காது.

அதேவேளை ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா நிலையெடுத்தால், அதை வைத்தே தமிழ் நாட்டில் காங்கிரசை முகவரி தெரியாது ஆக்கிவிட ஏனைய கட்சிகள் காத்திருக்கின்றன.

இலங்கைப் பிரச்சினை, இந்திய தேர்தல்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறிக் கொண்டாலும் தேர்தல் நலனை விட்டுக்கொடுத்து இலங்கைக்கு ஆதரவளிக்க காங்கிரஸ் ஒருபோதும் தயாராக இருக்காது.

அவ்வாறு நடந்தால் அது ஒரு அதிசயிக்கத்தக்க நிகழ்வாகவே இருக்கும். இத்தகைய பின்னணியில் கடந்த காலங்களை விடவும் இந்தியா முந்திக் கொண்டு இலங்கைக்கு எதிரான நகர்வுகளில் இறங்கலாமே தவிர, கடைசி நேரம்வரை இழுத்தடிக்க வாய்ப்புக்கள் குறைவு.

இது இலங்கைக்கு இன்னும் சிக்கலை ஏற்படுத்தக் கூடிய விடயம். ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குள், வரும் ஜனவரி மாதம், சீனா, ரஷ்யா, கியூபா, சவுதிஅரேபியா, வியட்நாம், மாலைதீவு போன்ற நாடுகள் நுழையப்போவது இலங்கைக்கு பெரிய பலம்தான் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், அதே சமயம் கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்க ஆறு நாடுகள், வரும் டிசெம்பர் 31 ஆம் நாளுடன் பதவியிழக்கவுள்ளன. எனவே, கூட்டல் கழித்தல் கணக்குக்களின் அடிப்படையில் பார்த்தால் புதிய 14 உறுப்பினர்களின் தெரிவு என்பது இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் உள்ள களச் சூழலை எந்த வகையிலும் மாற்றியமைக்கத்தக்கதொன்றாக அமையப் போவதில்லை.

அதேவேளை கடந்த இரண்டு ஆண்டுகளாக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானங்களுக்கு முறையே 23 மற்றும் 25 நாடுகள் ஆதரவு அளித்திருந்தது. ஆனால், அடுத்த ஆண்டில் அந்தளவுக்கு ஆதரவு கிடைக்காது என்ற கருத்தும் உள்ளது. கடந்தமுறை தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது அமெரிக்கா, எப்படியாவது, முன்னைய ஆண்டை விட அதிகான நாடுகளின் ஆதரவைப் பெற வேண்டும் என்று முனைப்புக் காட்டியது.

அடுத்த ஆண்டில் அதற்கான வாய்ப்பு இல்லாத நிலையில் பிரித்தானியாவை முன்னிறுத்தி சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கான அழுத்தம் கொடுக்கும் தீர்மானத்தைக் கொண்டுவர அமெரிக்கா முனையலாம். இது இலங்கைக்கு மிகப்பெரிய நெருக்கடியை உருவாக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

மெல்ல மெல்ல சர்வதேச அரங்கில் இலங்கை ஒரு தப்பிக்க முடியாத வியூகத்துக்குள் சிக்கி வருகிறது. போர்த் திட்டமிடலில் எந்தவொரு வியூகத்தை வகுக்கும்போதும் எதிரி தப்பிச் செல்வதற்கு ஒரு சிறிய வழி விடப்படும்.

அதுதான் போரின் போக்கை தீர்மானிப்பதாக இருக்கும். அதுபோன்று சர்வதேச விசாரணை அழுத்தங்களிலிருந்து தப்பிக்க இலங்கைக்கும் ஒரு சிறிய வழி விடப்படலாம். அது தென்னாபிரிக்காவின் முன்முயற்சியிலான, உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவாகவும் அமையலாம்.

எவ்வாறாயினும் வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் பொறுப்புக்கூறல் தொடர்பாக அரசாங்கம் எந்தவொரு நகர்விலும் இறங்காமல் இருக்குமேயானால் சர்வதேச சமூகத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் இலங்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே அமையலாம்.

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## வரலாறு-I

கவனிக்க வேண்டியவை

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* இல 1-40 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), விடைகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
* உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்பத்திரத்தில் ஒவ்வொரு வினாக்களுக்குமாக வழங்கப்பட்டுள்ள கூண்டில் நீர் தெரிவு செய்த விடைக்கான இலக்கத்துக்கு பொருத்தமான கூண்டினுள் (X) அடையாளமிடுக.
* விடைப்பத்திரத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்துச் செயற்படுக.

1. பல்வேறு நபர்கள் வரலாற்றுப் பாடம் தொடர்பாக பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர். ஈ.எச்.கார் என்பவர் வரலாறு பற்றி கூறியதானது.
   1. வரலாறு ஒரு தனித்த பாடமல்ல. அது எல்லாப் பாடங்களும் அடங்கிய ஓர் இல்லம்.
   2. நிகழ்காலமும், எதிர்காலமும், இறந்த காலத்திலிருந்து கட்டியெழுப்பப்படுவதுடன் அதனை மறந்து செயற்படுவது அத்திவாரமின்றிக் கட்டடமொன்றைக் கட்டுவதற்கு ஒப்பானதாகும்.
   3. நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக இறந்த காலத்தைப் புரிந்து கொள்ள முடியும்.
   4. வரலாறு என்பது மனித சமுதாயத்தின் வெளிப்பாட்டின் கதை.

2. இலங்கையின் வரலாற்றினை நோக்கும் போது பிரதான வரலாற்று மூலாதாரமாக உம்மால் கருதப்படக் கூடியதானது.
   1. தொல்பொருள் மூலாதாரங்களும் வம்சக் கதைகளும்
   2. வெளிநாட்டுக் குறிப்புக்களும் கதைகளும்.
   3. தொல்பொருள் மூலாதாரங்களும் வெளிநாட்டுக் குறிப்புக்களும்
   4. இலக்கிய மூலாதாரங்களும் தொல்பொருள் மூலாதாரங்களும்.

3. இலங்கைக்குப் பௌத்த மதம் கொண்டுவரப்பட்டமை தொடர்பான விபரங்கள் அடங்கிய வினயபிடகத்துக்காக எழுதப்பட்ட விளக்க நூலானது.
   1. ராஜரத்னாகரய
   2. சமந்த பாசாதிகாவ
   3. தம்பியா அட்டுவாகற்றபதய
   4. சம்மோக விநோதனிய

4. பின்வரும் வாக்கியங்களில் பிழையானதாகக் கருதக் கூடியது.
   1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்து மூல வரலாறு ஆரம்பமாவதற்கு முற்பட்ட காலமாகும்.
   2. குருவிட்டைக்கு அருகில் அத்தனகொடலேன அமைந்துள்ளது.
   3. வலாகஸ்ஸ ஜாதகக் கதையில் இலங்கைக்கு குடிபெயர்ந்தவர்கள் பற்றிய தகவல் உள்ளது.
   4. பலாங்கொடை மனிதன் முள்ளம் பன்றி, அணில், குரங்கு ஆகியவற்றை உணவாகக் கொண்டுள்ளான்.

5. தென் இந்திய ஆக்கிரமிப்பாளர்களும் அவற்றுக்கு முகங்கொடுத்த மன்னர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றை ஒழுங்குபடுத்த வரும் விடையானது.

| மன்னர்கள் | ஆக்கிரமிப்பாளர்கள் |
|---|---|
| 1. வலகம்பா | A. பாண்டு, பாரிந்த உட்பட்ட குழு |
| 2. மித்தசேன | B. இரண்டாம் பரந்தன் |
| | C-முதலாம் இராஜேந்திரன் |
| 3. ஐந்தாம் மகிந்தன் | D. பூஹைத்த உட்பட்ட குழு |
| 4. சூரதீசன் | E. சேன, குத்திக |

1. DEAC 2. DAEC 3. ADCE 4. DACE

6. இலங்கை வரலாற்றில் துட்டகைமுனு ஆட்சியின் போது இலங்கை வந்த வெளிநாட்டுத் தேசசஞ்சாரியொருவர் கேள்விப்பட முடியாத நிகழ்வு எது?
   1. மாத்தளை அலுவிகாரையில் திரிபீடகம் நூல் வடிவம் பெற்றமை
   2. நகர எல்லையைக் குறித்துக்காட்டி அநுராதபுர நகரின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்
   3. சத்தாதீச மன்னன் திகாமடுல்லையில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு நாட்டுக்கு உணவு வழங்குதல்
   4. சங்கமித்த தேரரின் வருகையுடன் இலங்கைக்கு புனித வெள்ளரசு மரக்கிளை கொண்டு வரப்பட்டமை

7. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியங்களில் தூரப் பிரதேசங்களில் வாழும் மக்களுடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்ள உற்சாகம் காட்டியவர் என்பதற்கு பொருத்தமான மன்னன்.
   1. 1ம் விஜயபாகு 2. 1ம் பராக்கிரமபாகு
   3. நிசங்கமல்லன் 4. 2ம் பராக்கிரமாகு

8. புராதன இலங்கையின் செதுக்கல் கலைஞர்கள் பெருங் கருங்கற்களைப் புத்தர் சிலைகளாக மாற்றினர். அவற்றில் புத்தபெருமானின் பத்துப் பண்புகளை வெளிப்படுத்தும் சிலையானது.
   1. சமாதி புத்தர் சிலை 2. தொலுவில புத்தர் சிலை
   3. அவுக்கன நிற்கும் சிலை 4. மாளிகாவில புத்தர் சிலை

9. கீழ்வரும் வாக்கியங்களில் பொருத்தமற்ற விடையைக் கொண்ட வாக்கியமானது
   1. கங்கை அல்லது ஓயாவை மறித்து குளம் நிர்மாணிக்கப்படுகிறது
   2. தப்போவ குளத்துக்கு மீஓயா மூலம் நீர் பெறப்படுகிறது.
   3. நுவர வாவி, கலா வாவி, பதவிய வாவிகளைப் போசிக்கும் பிரதேசம் நுவரகலாவிய எனும் பெயரால் அழைக்கப்படுகிறது.
   4. சுருங்கை என்பது குளத்தில் சேற்றுடன் நீர் வெளியேற்றுவதற்கான கதவாகும்.

10. அநுராதபுர யுகத்தில் பெண்களுக்கு முக்கிய இடம் கிடைக்கப் பெற்றது. அதற்கான காரணி
    1. கல்வி மூலம் பெண்கள் சமூகத்தில் உயர் நிலையில் இருத்தல்
    2. பெண்களுக்கு அரசியல் தலைமைத்துவம் கிடைத்தமை
    3. பௌத்த தர்மம் மூலம் கிடைத்த குணவியல்பு மூலம் பெண்களுக்கு உயர் வரவேற்பு கிடைத்தமை
    4. காணி உரிமைச் சட்டம் மூலம் குடும்பத்தில் காணி உரிமை பெண்களுக்குக் கிடைத்தமை

11. மகாசேன மன்னனால் நீர்ப்பாசனத்திற்கு மகத்தான சேவை நடைபெற்றுள்ளது. எனவே மகாசேன மன்னன் அழைக்கப்பட்ட கௌரவ நாமமானது.
    1. களுபண்டார கடவுள் 2. மின்னேரிய கடவுள்
    3. மினிப்பே கடவுள் 4. சமன் கடவுள்

12. *வட்ட தாகப* என்பதில் குறிப்பிடப்படுவதானது.
    1. சைத்தியத்தின் பாதுகாப்புக்கு உருவாக்கப்பட்ட வீடாகும்.
    2. சைத்தியத்தின் அழகுக்காக நிர்மாணிக்கப்பட்டது.
    3. சைத்தியத்தில் பல் பதிப்பதற்கான பகுதியாகும்.
    4. சைத்தியத்தில் கோலாகார கர்பம் நிர்மாணிக்கப்படல்

13. இலங்கையின் கட்டட நிர்மாணம் பல்வேறு நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட நிகழ்வாகும். அவைகளுக்கு இடையில் யாப்பகூவ இராச்சியத்தின் போது கட்டட நிர்மாணம் தொடர்பாக அதிகளவு செல்வாக்குக்கு உட்பட பிரதேசமானது.
    1. இத்தாலி 2. மொகலாய பேரரசு
    3. தென் இந்தியா 3. தென் கிழக்காசிய நாடுகள்

14. A- சந்திரபானுவின் ஆக்கிரமிப்புக்கு முகங்கொடுத்தல்
    B- மன்னன் ஆவதற்கு முன் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனாக இருத்தல்
    C- மாகனிடமிருந்து நாட்டை மீட்டல்
    D- சிங்கள சங்கய எனும் புரட்சிக்கு முகங்கொடுத்தல்
    E- 8ம் வீர பராக்கிரமபாகு பெயரில் மன்னனாகல்

    மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களில் 6 ம் புவனேகுபாகுக்கு மாத்திரம் தொடர்புபட்ட விடையானது
    1. AE 2. AC 3. BE 4. BD

15. யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்புபட்ட சம்பவங்களும் அதற்குரிய தகவல் பெறும் மூலாதாரங்களும் அ, ஆ நிரல்களில் உள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்த வரும் விடை

| அ நிரல் | ஆ நிரல் |
|---|---|
| 1. 12 ஆரிய சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தில் ஆளுதல் | A-ஆலம்புரிய சாசனம் |
| 2. வசபன் ஆட்சி வட பகுதியில் பரவி இருந்தல் | B-நிகாய சங்கிறஹய |
| 3. விஜய நகர் பேரரசு வட பகுதியில் ஆக்கிரமித்தல் | C-அஸ்கிரி தல்பத |
| | D-யாழ்ப்பாண வைபவமாலை |
| 4. கம்பளை இராச்சிய காலத்தில் ஆரிய சக்கரவர்த்தி தெற்கில் ஆக்கிரமிப்பு செய்தல் | E-வல்லிபுரம் பொற்சாசனம். |

1. DEAB 2. BCDA 3. DEBA 4. ADCE

16. கி.பி. 1815 இல் ஆங்கிலேயருக்கு மலைநாட்டை வெற்றி கொள்ள உதவிய பிரதான சாதக விளைவானது.
    1. கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு அரசு அனுசரணை வழங்குதல்
    2. மலையகப் பிரதானிகளது ஆதரவு கிடைத்தல்
    3. அரசன். பிரதானிகள் மற்றும் பொதுமக்களுக்கிடையில் ஒற்றுமை குலைவு
    4. நாட்டு மக்கள் ஆங்கிலேயருக்கு உதவுதல்

17. i. கி.பி. 1910 யாப்பு சீர்திருத்தத்தில் படித்த இலங்கையர் என்ற வகையில் சட்டவாக்கக் கழகத்திற்குத் தெரிவானவர்.
    ii. கி.பி. 1915 இல் சிங்கள, முஸ்லிம் கலவரத்தின் போது விசாரணையின்றிச் சிறைக்கு உட்படுத்தப்பட்ட சிங்கள மக்கள் தலைவர்களை விடுதலை செய்வதற்காகப் பெரும் பிரயத்தனத்தில் ஈடுபடல்.

    மேற்குறிப்பிடப்பட்ட சம்பவங்களுடனான தமிழ்த் தலைவர்.
    1. ஸ்ரீபொன்னம்பலம் அருணாசலம்
    2. ஸ்ரீபொன்னம்பலம் இராமநாதன்
    3. சௌமிய மூர்த்தி தொண்டமான்
    4. எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

18. கி.பி. 1919 இல் இலங்கையில் மத்திய தர தலைவர்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட அரசியல் போராட்ட இயக்கத்தின் முக்கியமான ஒரு பிரதிபலனாக குறிப்பிடப்படுவதானது.
    1. இந்திய தேசிய சங்கம் உருவாக்கப்படல்
    2. இலங்கைத் தேசிய சங்கம் உருவாக்கப்படல்
    3. பௌத்த வாலிபர் சங்கம் உருவாக்கப்படல்
    4. மது ஒழிப்பு இயக்கம் உருவாக்கப்படல்

19. தேசிய விவசாய நடவடிக்கைகளை மேற்படுத்துவதற்காக கி.பி. 1900 இல் நீர்ப்பாசன திணைக்களத்தை உருவாக்கியதேசாதிபதி
    1. றொபட் பிரவுன்றிக்
    2. தோமஸ் மெயிட்லண்ட்
    3. வெஸ்ட் ரிஜ்வே
    4. பிரட்ரிக் நோர்த்

20. கி.பி. 1815 மார்ச் 2 ஆம் திகதி கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன் ஆங்கிலேயரால் ஏற்றப்பட்ட பிரித்தானியக் கொடியைக் கீழே இறக்கி சிங்கக் கொடியை ஏற்றிய பிக்கு.
    1. வாரியபொல ஸ்ரீ சுமங்கல பிக்கு
    2. குடாபொல பிக்கு
    3. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல பிக்கு
    4. வெலிவிட்ட சரணங்கர பிக்கு

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்துடனான ஒத்துழைப்பை ஜனாதிபதி செயலில் காட்டவேண்டும்

## இரா.சம்பந்தன் எம்.பி.கோரிக்கை



(கொழும்பு)

**வடக்கில் புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள வடமாகாண சபையோடு ஒத்துழைப்புடன் செயற்பட அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் அதனை செயலில் காட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

'இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிரேட் லோச்சனை கடந்த வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்த போதே வடக்கு மக்களின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பில் இரா.சம்பந்தன்கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபை கடமைகளை நிறைவேற்ற அரசுடன் ஒத்துழைத்து செயற்பட நாம் தயாராகவுள்ளோம். வடமாகாண சபை தேர்தல் முடிந்த கையோடு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்தின் ஒத்துழைப்பை பெரிதும் எதிர்பார்த்தது.

அதனடிப்படையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையிலேயே சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டார்.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நாம் இதனை மேற்கொண்டோம். அது மாத்திரமன்றி எமது நிலைப்பாட்டை நாம் செயல் மூலம் கீாட்டினோம். எனினும் தொடரும் சம்பவங்கள் மிகவும் கவலையளிப்பனவாகவுள்ளன.

யாழ்ப்பாணம் வலி. வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள பாடசாலைக் கட்டடங்கள், இந்து ஆலயங்கள் என்பன உடைக்கப்பட்டு வருகின்றன. இதனை எமது மக்கள் எமக்கு முறையிட்டனர். இது மிகவும் மனிதாபிமானமற்ற செயற்பாடாகும்.

நான் இது தொடர்பில் ஜனாதிபதியிடமும் அவரது செயலாளர் லலித் வீரதுங்கவுடனும் தொலைபேசி மூலம் நேரடியாகப் பேசினேன். அதற்கு அவர், அதனை உடனடியாகத்தடுத்து நிறுத்துவதாகவும் அத்துடன் இவ்வாறான செயல்கள் இனிமேல் தொடரமாட்டாது என்றும் உறுதியளித்தார்.

இதன் தொடர்ச்சியாக கடந்த சில தினங்களுக்கு முன் மீண்டும் அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வீடுகளின் கூரைகள் பிரித்தெடுக்கப்படுவதுடன், யன்னல்கள் உடைத்தெடுக்கப்பட்டு கட்டடங்கள் முற்றாக இடித்தழிக்கப்படுவதாக தெலலிப்பழையிலிருந்து மக்கள் எனக்கு அறிவித்தார்கள்.

இது தொடர்பில் நான் ஜனாதிபதியின் செயலாளரின் கவனத்துக்கு மீண்டும் கொண்டுவந்தேன்.

இதேவேளை வலி.வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்து ஆலயங்கள் இடித்தழிக்கப்படுவதாகவும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும் இடித்தழிக்கப்படுவதாகவும் வெளியான செய்தியை அடுத்து அதன் உண்மை நிலை குறித்து அறிய அப்பகுதிக்கு விஜயம் செய்த வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டார்.

இது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒருபோதும் உதவாது. இதனால் மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர். வடமாகாண சபை இன்னமும் முறையாக இயங்கவில்லை.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதியின் செயலாளரிடம் வடமாகாண சபையின் நிர்வாகக் கட்டமைப்பு குறித்து பேசிய போதே பல வாக்குறுதிகளை எமக்கு வழங்கினார். அந்த வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

வடபகுதி மக்கள் அளித்த தீர்ப்பை ஜனாதிபதி மதிக்க வேண்டும். நோர்வே தூதுவருக்கு ஜனாதிபதி கூறியிருக்கும் விடயம் வரவேற்கத்தக்கதாகும். வடமாகாண சபையுடன் அரசாங்கம் ஒத்துழைத்துச் செயற்படுவதன் மூலமே மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

வடமாகாண சபையின் சீரான இயககத்தையே சர்வதேச சமூகம் எதிர்பார்த்துள்ளது. வடக்கில் இன்று நடைபெறும் சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந் துள்ளன.

வலிகாமம் வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் கட்டடங்கள் உடைக்கப்படுவது உடனடியாக நறுத்தப்பட வேண்டும். அதேவேளை வடமாகாண சபையின் சீரான இயக்கத்திற்கு அரசாங்கம் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும். மக்கள் அச்சம், பீதி இன்றி வாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். தொடரும் அச்சுறுத்தல்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

இல்லையேல் நிலைமை மேலும் மோசமடையவே வழிவகுப் ப தாக இருக்கும். அதுமாத்திரமன்றி புரிந்துணர்வு நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழியே இல்லாமல் போய்விடும். மேலும் பொறுப்புக்கூறும் நிலையும அதிகரித்துச் செல்வதாக இருக்கும்.

எனவே ஜனாதிபதி கூறுவது போன்று வடமாகாண சபையுடன் ஒத்துழைத்து செயற்படுவதை தாமதமின்றி துரிதமாக செயலில் காட்ட வேண்டும். அவ்வாறு செயற்படும் பட்சத்தில் நாம் தேவையான வகையில் ஒத்துழைத்து செயற்படத் தயாராக உள்ளோம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (அ-2)

## இலங்கை போ.சபை பேருந்து குழுவினர் சபையின் சட்டத்தை பின்பற்ற வேண்டும்

### யாழ்.சாலை முகாமையாளர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்து சபையின் வடபிராந்திய யாழ்.சாலையில் கடமையாற்றும் சகல பேருந்து குழுவினர்களும் தமது கடமையின் போது பேருந்தில் பயணிக்கும் முதியவர்கள், விசேடதேவையுடையோர், கர்ப்பிணித் தாய்மார்கள், மதகுருமார்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளித்து பேருந்தில் ஆசன ஒதுக் கீடு செய்யவேண்டும் என இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய யாழ். சாலையின் முகாமையாளர் செ.குலபால செல்வம் அறிவித்துள்ளார்.

மேலும் தமது கடமையின் போது பேருந்தில் பயணிக்கின்ற பயணிகளுடன் மரியாதைக்குரிய முறையில் நடந்து கொள்ளவேண்டும் எனவும் முகச்சவரம், குறுக வெட்டப்பட்ட தலைமுடி, சுத்தமான உடைகளுடன் இலங்கை போக்குவரத்து சபையின் சட்டத்திற்கமைவாக கடமைக்கு வருகை தரவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேற்படிவிதிமுறைகளை மீறும் ஊழியர்களுக்கு எதிராக சபையின் சட் திட்டத்திற்கமைவாக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய வலம்புரி பத்திரிகையில் வெளியாகியிருந்த "பேருந்து நடத்துநர்கள் அநாகரிகமாக நடப்பதாக முறைப்பாடுகள்" என்றதலைப்புடனான செய்தியை அடுத்தே இவ்வாறு ஒழுக்க நடைமுறை அமுல்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-5)

## வெளிநாட்டு தூதுவர்கள் நியமிக்கப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கைக்கான இரண்டு வெளிநாட்டு தூதுவர்கள் தமது நியமனப் பத்திரங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கான தாய்லாந்து தூதுவரான நோபோன் ஆச்சரியாவனிச் மற்றும் இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுரான அஸிசுடீன் அஹமட் சதா ஆகியோர் தமது நியமனப் பத்திரங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்டார். (அ-2)



செலான் வங்கியின் நெல்லியடிக் கிளையின் நான்காவது ஆண்டுப் பூர்த்தி விழா கிளைக் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற போது...

(படம்:- கரணவாய் செய்தியாளர்)

## மானிப்பாய் இந்துவின் உதயம் நாடகம் தேசிய மட்டத்திற்கு தெரிவு

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சும் கொழும்பு ரவர் மண்டப திரையரங்க மன்றமும் இணைந்து நடத்திய நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் "உதயம்" எனும் நாடகம் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற நாடகப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்ட நாடகப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இந்நாடகத்திற்கான எழுத்துருவாக்கம் நெறியாள்கையினை கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மேற்கொண்டுள்ளார். இசையினை அகிலனும் மேடை முகாமையினை மோகனராஜனும் மேற்கொண்டுள்ளார்கள்.

தேசியமட்டப்போட்டிகள் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பு ரவர் மண்டப திரையரங்கில் இடம் பெறவுள்ளது. (அ-2-2)

## வெளிவிவகார அமைச்சு சர்வதேச ஆதரவை இழந்து வருகின்றது

### பேராசிரியர் ராஜீவ தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சகமானது தனது தவறான வழிமுறையினால் அனைத்துலகத்தின் ஆதரவினை இழந்து வருவதாக இராஜதந்திரியான பேராசிரியர் ராஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.


அது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்கு வழியமைத்து விடுமோ என்ற அச்சத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

சிங்கள பௌத்த பெரியவாதத்தை நியாயப்படுத்தி அனைத்துலக அரங்கில் கருத்துக்களை பதிந்து வருகின்றவர்களில் ஒருவரான பேராசிரியர் ராஜீவ விஜயசிங்க, இலங்கைக்கான ஆதரவுத்தளத்தினை தக்கவைப்பதற்கு தான் உட்பட தமரா குணநாயகம், தயான் ஜெயதிலக போன்றவர்கள் முன்வைத்த கருத்துக்களை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான வெளிவிவகார அமைச்சகம் நிராகரித்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இலங்கை தொடர்பிலான பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனது நிலைப்பாடு இதற்கான உதாரணமாக அமைகின்ற தெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் பாரபட்சமாக நடந்து கொளவதாகவும் அவர் சாடியுள்ளார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தோற்றம் பெற்றிருந்த சமயம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துங்கள் என தான் முன்வைத்த யோசனையை அன்று நிராகரித்திருந்த அரசாங்கம், தற்போது அதனால் ஏற்பட்டு வருகின்ற நெருக்கடியை சந்தித்து வருவதாகவும் அவர் தெரி வித்துள்ளார். (அ-2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயாறு மக்கள் வழிபடுவதற்கும் இராணுவத்தினர் தடை விதிக்கின்றனர்

## வடமாகாணசபை உறுப்பினர் சி.சிவமோகன் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

**யுத்தம் முடிவடைந்த நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நாயாறு மக்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு இராணுவத்தினர் தடையாகவுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் குற்றம்சாட்டியுள்ளார்.**

நாயாறு பிரதேச மக்களுடனான சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாயாறு பிரதேச மக்களின் காணிகளில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இவ் இராணுவ முகாம் பகுதிக்குள் அப்பிரதேச மக்கள் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்த ஏற்றத்தடி பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

அப் பிரதேச மக்களின் நம்பிக்கைக்குரிய பிரதான வழிபாட்டுத்தலமான ஏற்றத்தடி பிள்ளையார் ஆலயத்திற்கு விசேட தினங்களில் கூட சென்று வழிபட இராணுவம் அனுமதி மறுத்துவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இவ் ஆலயத்தின் அருகில் புத்தர் சிலை நிறுவப்பட்டு அது பௌத்த வழிபாட்டுத் தலமாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.



இது தவிர, நாயாறு பாலத்தடியில் உள்ள முனியப்பர் ஆலயத்திலும் வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். கற்பூரம் கொளுத்துவதற்கும், பொங்கல் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் கூட்டமாக சென்று ஆலயத்தில் வழிபடுவதற்கும் இராணுவத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் மக்கள் தற்போது குடியிருக்கின்ற நாயாறு குடியிருப்பு பகுதியில் வீதியோரத்தில் உள்ள மரத்தின் கீழ் சிறிய வழிபாட்டிடம் ஒன்றை அமைத்து வழிபட்டு வரும் நிலையில் அங்கும் சுதந்திரமாக வழிபட முடியாதவாறு இராணுவ காவலரண் ஒன்றினை ஆலயத்திற்கு மிக நெருக்கமாக இராணுவத்தினர் அமைத்துள்ளனர். இதனால், ஆலயத்தை சுற்றி வழிபட முடியாத நிலை காணப்படுவதாகவும் அப் பகுதி மக்கள் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

இராணுவ முகாம்களை அகற்றி மக்கள் சுதந்திரமாக வழிபாடுகளை மேற்கொள்ளவும் தமது மதத்தை பின்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-250)

# கௌரவிப்பு நிகழ்வு

(பூந்தோட்டம்)

செக்கடிப்புலவு அ.த.க. பாடசாலையில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கே. எஸ். ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக வவுனியா தெற்கு வலய திட்டமிடல் பிரதி கல்விப்பணிப்பாளர் செல்வி. லதாங்கி அம்பிகைபாலன், கௌரவ விருந்தினர்களாக கார்கில்ஸ் வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் ஏ.வி. பீடில்,சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மு. பாலசிங்கமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-266)




# நெளுக்குளம் கலைமகளில் பரிசளிப்பு விழா

நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அதிபர் சு. அமிர்தலிங்கம தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி. ப. சத்தியலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், ம. தியாகராசா, ஆர்.இந்திரராசா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகர கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம். பி. நடராஜ், வவுனியா தெற்கு பிரதேசசபையின் தலைவர் க. சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் இவ்வாண்டு நடைபெற்ற கல்வி, இணைப்பாட விதானம், விளையாட்டு போன்ற துறைகளில் சாதனை படைத்த மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-266)

# வவு.வில் மாணவர்களின் கையில் கற்பூரம் கொளுத்திய ஆசிரியர்

(குருமன்காடு)

மாணவர்களிடம் இருந்து உண்மையை வரவைப்பதற்காக வகுப்பாசிரியர் ஒருவர் 19 மாணவர்களின் கையில் கற்பூரம் கொளுத்திய சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை வவுனியா சுந்தரபுரம் பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் வகுப்பறை மேசையில் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய கடிதம் ஒன்று இருந்துள்ளது. இதனை வகுப்பாசிரியர் எடுத்து வாசித்ததும் அதிர்ந்து போயுள்ளார்.

தனது வகுப்பு மாணவர்களிடம் இக் கடிதம் யாரால் எழுதப்பட்டது என கேட்ட போது மாணவர்கள் நாங்கள் எழுதவில்லை. இது பற்றி எமக்கு எதுவும் தெரியாது எனக் கூறியுள்ளனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த ஆசிரியர் தனது வகுப்பு மாணவர்கள் 19 பேரினது கையிலும் கற்பூரத்தை கொளுத்தி சத்தியம் செய்யுமாறு பணித்து மாணவர்களின் உள்ளங்கைகளில் கற்பூரத்தை கொளுத்தியுள்ளார்.

கற்பூரம் கொளுத்தப்பட்டதன் காரணமாக நான்கு மாணவர்களின் கையில் காயம் ஏற்பட்டுள்ளதுடன் ஏனைய 15 மாணவர்களின் உள்ளங்கையில் காயம் ஏற்பட்டுள்ளது.

இதையறிந்த பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் பாடசாலையுடன் முரண்பட்ட போதும் பாடசாலை அதிபர் அதனை சமரசம் செய்து வைத்துள்ளார்.

எனினும் வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைவாக இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-250)

# நிர்வாக தெரிவு இல்லாத மாதாந்த பொதுக்கூட்டம்

## முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் எதிர்ப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தமது சங்கத்தினுடைய கூட்டம் மற்றும் நிர்வாகத் தெரிவு பலகாலமாக நடைபெறவில்லை. தற்போது தலைமை தாங்குபவர்களிடம் பல அழுத்தங்களை கொடுத்தனர்.

அப்படியிருந்த போதிலும் நிர்வாகத் தெரிவோ கூட்டமோ நடைபெறாமையால் அண்மையில் கிளிநொச்சி நீதிமன்றத்தில் இயங்கும் சட்ட ஆணைக்குழுவினர் முன்னிலையில் தமது கோரிக்கையை விடுத்திருந்தனர்.

இதன்படி இருபகுதியினரையும் அழைத்து கடந்த நவம்பர் மாதம் 15ஆம் திகதி கூட்டத்தைக்கூட்டி ஒற்றுமையுடன் செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டது.

எனினும் 15ஆம் திகதி கூட்டம் நடைபெறவில்லை. நேற்று முன்தினம் 30ஆம் திகதி கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.


இதில் நூற்றுக்கு மேற்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் வருகைதந்திருந்த போதும் நிர்வாகத் தெரிவு எதுவும் நடைபெறமாட்டாதென தற்போதைய தலைமைத்துவத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இத்தெரிவுகள் எதுவும் நடைபெறாமல் இழுபறி நிலையே காணப்படுகிறது.

நேற்று முன்தின கூட்டத்திற்கு போக்குவரத்து கண்காணிப்பு பிரிவுக்கான பொலிஸாரும் வந்தமையால் அவர்களிடம் இத்தெரிவை நடத்த ஒழுங்கு செய்யுமாறு கேட்டபோது தம்மால் போக்குவரத்திற்கான நடவடிக்கை சம்பந்தமாகவே கதைக்கமுடியும் எனத் தெரிவித்தனர்.

இதனால் இழுபறியான நிலை மேலும் ஏற்படாமல் பொலிஸார் எதிர்வரும் 5ஆம் திகதி கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்வதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான இழுத்தடிப்புகளுக்கு அரசியல் பின்னணி காரணமோ? என முச்சக்கரவண்டி உரிமையாளர்களால் கேள்வி எழுப்பப்படுகிறது. (ம-254)



22 ஆவது பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டையொட்டி கல்வி அமைச்சினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இடைநிலைப்பிரிவில் தமிழ்மொழி மூலம் முதல் இடம்பெற்ற வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையின் மாணவி அயந்தன் சரஞ்சியாவுக்கு பாடசாலை அதிபர் திருமதி எஸ். தர்மகுலசிங்கம் வெற்றிக் கேடயத்தினை வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

(படம்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று வைத்தியசாலைகளுக்கு ஒரு வைத்தியரே கடமையில்

## நோயாளிகள் சிரமம்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரேயொரு வைத்தியரே மூன்று வைத்தியசாலைகளிலும் ஒரே தினத்தில் கடமையாற்ற வேண்டிய அவல நிலை இருப்பதால் அவரை நம்பி வரும் பெருமளவிலான நோயாளர்களும் அவ்வைத்தியரும் பெரும் சிரமமடைவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அக்கராயன்குளம், வன்னேரிக் குளம், பூநகரி அரசினர் வைத்தியசாலைகள் மூன்றுக்கும் ஒரே வைத்தியரே நோயாளரைப் பார்வையிட வேண்டிய அவலநிலை பல மாதங்களாக தொடர்கிறது.

இரண்டு வருடமாக நிரந்தர வைத்தியர் இல்லாத பூநகரி அரசினர் வைத்தியசாலையில் வாரத்தில் நான்கு நாட்களில் பிற்பகல் இரண்டு மணி நேரம் மட்டும் பார்வையிடப்படுவதால் காத்திருக்கும் நோயாளர் அனைவருக்கும் சிகிச்சை அளித்துச் செல்வதில் வைத்தியரும் நோயாளரும் சிரமமடைகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறினால் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-84)

# அடிப்படை வசதிகள் இன்றி கிளி/சாரதாதேவி வித்தியாலயம்

(கிளிநொச்சி)

கிளி/சாரதாதேவி வித்தியாலயம் அடிப்படை வசதிகள் அற்று கஷ்ட நிலையில் இயங்கி வருவதாக மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளி/பாரதி வித்தியாலயத்திலிருந்து தரம் 5 இற்கு உரிய பாடசாலையாக இப்பாடசாலை தனித்து இயங்க ஆரம்பித்தது.

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இப்பாடசாலை உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் போதிய அடிப்படை வசதிகள் எதுவும் இங்கு ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.

300 மாணவர்கள் வரையில் கல்வி கற்கும் இப்பாடசாலையில் அண்மையில் நடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மழைகாலம் ஆரம்பித்த நிலையில் கூரை ஒழுக்கின் கீழேயே மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டு கஷ்டமடைகின்றனர்.

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் எதிர் வரும் 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப் பாடசாலைக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவவேண்டுமென பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-254)

## புனரமைக்கப்படாத வீதியால் பயணிகள் சிரமம்



(பூநகரி)

மீன்பிடியில் ஈடுபடும் 300 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுவரும் மன்னார் வீதியில் இருந்து பள்ளிக்குடா துறைக்குச் செல்லும் வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் மேற்படி தொழிலாளர்கள் உட்பட வியாபாரிகளும் பெரும் சிரமமடைவதாக பள்ளிக்குடா கடற்றொழிலாளர் சங்கத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

கடற்கரையை அண்மித்த பகுதிகளில் தேர்தல் காலத்துக்கு முன்னதாக பறிக்கப்பட்ட கிரவல் மண் கும்பிகள் பரவப்படாது, கடந்த இரு மாத காலமாக வீதியில் தொடர்ந்தும் இருப்பதனை காணமுடிகின்றது இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. இவ்வீதியை பயணிகள் உட்பட பாடசாலை மாணவர்களும் உபயோகிப்பதால் உரிய அதிகாரிகள் இது தொடர்பில் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து உதவ வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-84)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# பாதீனியம் எமது விளை நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் பச்சை இராணுவம்

## வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு



பாதீனியம் ஒரு சாதாரண செடி அல்ல. ஆக்கிரமிப்புக்களை, ஒரு பிரதேசத்தைத் தாயகமாகக் கொண்ட ஓர் இனம் இன்னொரு பிரதேசத்திற்கு வலுக்கட்டாயமாக இடம்மாறும் போது சில வேளைகளில் அங்கு ஆக்கிரமிப்பு இனமாக மாறிவிடுகிறது.

தொடக்கத்தில் யாழ். மாவட்டத்தில் கோப்பாயில் மட்டும் காணப்பட்ட இக்களை இன்று வடக்கு-கிழக்கெங்கும் எமது விவசாய நிலங்களை, தெருவோரங்களை, ஒரு பச்சை இராணுவம்போல ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

எமது விவசாய நிலங்களில் நிலைகொண்டிருக்கும் இலங்கை இராணுவத்தை வெளியேறக் கோருகின்ற நாம் எமது விவசாய நிலங்களை நிறைத்து நிற்கும் இந்தப் பச்சை இராணுவத்தையும் உடனடியாக விரட்ட வேண்டியவர்களாக உள்ளோம் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் புத்தூர் நிலாவரையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் இணைந்து பாதீனியம் ஒழிப்புச் சிரமதானப் பணியை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் அவர் உரை நிகழ்த்துகையில்,

வடக்கில் மாகாண அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் எமது மாகாணத்தைப் பல வழிகளிலும் கட்டியெழுப்ப முயற்சித்துக் கொண்டிருக்கும் நாம் எமது விவசாயப் பொருளாதாரத்தை மீள் எழுச்சிகொள்ள வைப்பதற்காகவும், எமது இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்காகவும் இந்த அழிப்பு வேலையிலும் அவசரமாக ஈடுபடவேண்டியிருக்கிறது.

பாதீனியம் எமது மண்ணுக்கு உரித்தான ஒரு இனமல்ல. வந்தேறு குடி. அந்நிய இனம். இந்தியப் படைகள் இங்கு வந்தபோது அவர்கள் எடுத்துவந்த செம்மறி ஆடுகளுடனும் இராணுவத் தளபாடங்களுடனும் சேர்ந்து வந்த ஒரு ஊடுருவல் இனம். இதனை, ஏதோ இந்தியா திட்டமிட்டு எடுத்து வந்த ஒன்றாக விளங்கிக் கொள்ளத் தேவை இல்லை. அவர்களுக்கும் அது அமெரிக்காவில் இருந்து இறக்குமதியான ஒன்றுதான். அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான கோதுமைகளுடன் சேர்ந்து வந்த பாதீனியம் இன்று அவர்களையும் பாடாய்ப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சு பாதீனியம் ஒழிப்பின் முதற்கட்டமாக இந்த மார்கழி மாதத்தைப் பாதீனியம் ஒழிப்பு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆனால், இது ஒரு மாதத்தில் செய்து முடிக்கக்கூடிய பணியல்ல. பாதீனியத்தின் விதை நிலத்தின் கீழ் பல வருடங்கள் உறங்கு நிலையிலிருந்து மீளவும் முளைக்கக் கூடியது.

அதேபோன்று, பாதீனியம் அங்கும் இங்கும் என பரவியிருக்கும் நிலையில் அதனை ஒழிப்பது விவசாயிகளால் மாத்திரம் தனித்து ஒப்பேற்றக் கூடியதுமல்ல.

சகல தரப்பினரும் இணைந்து இதனை ஒரு தேசியக் கடமையாகக் கருதிச் சில வருடங்களுக்குத் தொடர்ச்சியாக முன்னெடுத் தாலே பாதீனியத்தை ஒழிப்பது சாத்தியமாகும் என்று அவர் தெரிவித்தார். (6)

# பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளில் ஆசிரியர் நியமனத்திற்கு தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட தரவுகளுக்கமைய தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களுக்கு இன்று திங்கட் கிழமை, மு.ப 9மணிக்கு கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன. கீழ் குறிப்பிடப்பட்டோர் தவறாது கலந்து கொண்டு தங்கள் நியமனக் கடிதத்தினை பெற்றுக்கொள்ளுமாறு வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

பெண்கள் இள வர்ண சேலையுடனும் ஆண்கள் கறுப்பு நிற நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேட்டும் அணிதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இராசரெத்தினம் நிரூஜன் (இல-66, பலாலி வீதி), வேலும்மயிலும் ரமணன் (கரணவாய் மத்தி), மகேஸ்வரன் நிதர்ஷன்(அல்வாய் தெற்கு), சிவகுமாரன் வித்தியதாசன் (மீசாலை கிழக்கு) கணேசமூர்த்தி கிருசாந்தன் (இடைக்காடு), வடிவேல் ரமேஷ் 14ஆம் ஒழுங்கை, முல்லை வீதி), பாலசுப்பிரமணியம் கஜானன் (செம்பியன்பற்று தெற்கு), செல்வநாயகம் மயூரதன் (வட்டுக்கோட்டை தெற்கு), முருகதாஸ் மகிழன் (அளவெட்டி வடக்கு), இராசரெத்தினம் இராகவன் (கெம்மாந்தனாறு), தனா பாலசிங்கம் பிரதீப் (முகாவில்), [illegible] பண்டாரிக்குளம்), [illegible] (167, விவேகானந்த நகர் மேற்கு), தேவராசா கிரிதரன் (கோண்டாவில் வடக்கு), கந்ததாசன் ராகவன் (அல்வாய் வடக்கு), நடராசா சாந்தகுமார் (இல, 327,2ம் குறுக்குத் தெரு,கூமாங்குளம்),தர்சிகா தர்ம லிங்கம் (கோண்டாவில் மேற்கு), திருச் செல்வம் ரமேஜினி (சமளங்குளம், பாடசாலை வீதி), குணரட்ணம் டிலோமையினசீலன் (ஏழாலை தெற்கு), கனகராசா தமிழினி (தாண்டிக் குளம்), யோசெப் பிரதீபா (புளியங் குளம்), பிரபாகர் வைலட்சுபாசினி (சூராவ த்தை), சுலக்ஷனா சசிகுமார் (மானிப்பாய் வீதி, மருதனார்மடம்),நாகரத்தினம் நாக ராஜா (1ம் கட்டை,பருத்தித்துறை), பிரான்சீஸ் சேவியர் [illegible] (நெலிக் குளம், வங்காலை), [illegible]ஜோதி சிவதரிசினி (குருமன்காடு)

# கலாசார விழா

துணுக்காய் பிரதேச செயலகத்தின் கலாசாரவிழா இன்று காலை 10மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பண்பாட்டு ஊர்வலம் துணுக்காய் சந்தியில் இருந்து ஆரம்பமாகி துணுக்காய் பிரதேச செயலகத்தை வந்தடையவுள்ளது.

இந்நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலகத்தின் கீதம், கொடி, சீருடை, சின்னம் என்பன அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் முன்னாள் பிரதேச செயலர் நாகலிங்கம் நந்தகுமாரின் நினைவுத் திருவுருவப்படம் அவரது பாரியாரால் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது என பிரதேச செயலர் சிவபாலன் குணபாலன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ம-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
- திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஓம் நமசிவாய மந்திரத்தை ஆன்மீக வங்கியில் முதலீடு செய்க

## சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஓம் நமசிவாய ஆன்மீக வங்கியில் முதலீடு செய்யுமாறு யாழ்ப்பாணம் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

உலகளாவிய ரீதியில் வாழும் இந்துக்கள் அனைவரும் உணர்வுபூர்வமாக ஒன்று சேர்ந்து ஓம் நமசிவாய என்னும் திருநாமம் கொண்ட ஆன்மீக வங்கியில் ஓம் நமசிவாய என்னும் மந்திரத்தை முதலீடு செய்வதற்கு முன்வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மணித்திருநாட்டில் இந்து சமயத்துக்கும் இந்து மக்களுக்கும் ஏற்பட்டுள்ள நலிவுற்ற தன்மையைப் போக்கி வலுச்சேர்ப்பதற்கு ஓம் நமசிவாய என்னும் மந்திரம் கோடிக்கணக்கில் தேவைப்படுகின்றது.

வலுக்குன்றி வரும் இந்து நெறிக்கு சிவகவசம் இடுவதற்கு ஓம் நமசிவாய எனும் மந்திரம் முதலீடு செய்யப்பட வேண்டும்.

அதற்கு உலகெங்கும் பரந்து வாழும் இந்துமக்கள் ஒவ்வொருவரும் ஓம் நமசிவாய என்னும் மந்திரத்தை எழுதி இந்த **ஓம் நமசிவாய** என்னும் ஆன்மீக வங்கியில் முதலீடு செய்ய அழைக்கின்றோம்.

இந்துக்களின் புனிதமான திருநாளான இம்மாத திருவெம்பாவை விரதநாட்களில் (09.12.2013 முதல் 18.12.2013 வரை) ஓம் நமசிவாய என்னும் மந்திரத்தை இயன்றவரை எழுதி அவற்றின் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி, சர்வதேச இந்து குருமார் ஒன்றியம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கவேண்டும்.

நேரடியாகக் கையளிக்க விரும்புவோர் எமது அமைப்பின் பிரதேச பிரதிநிதிகளான சிவாச்சாரியர்களிடம் கையளிக்கலாம். வெளிநாடுகளில் வாழும் இந்துக்கள் மத்திரத்தை எழுதி ஸ்கான் (Scan) செய்து jaffnapriest@gmail.com என்னும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி திங்கட்கிழமை பிரதோஷ விரத புண்ணிய காலத்தில் வண்ணை சிவாலயத்தில் இருந்து ஊர்வலமாக கீரிமலை நகுலேஸ்வராலயத்திற்கு மந்திரவங்கி கொண்டு சென்று அங்கு சிவார்ப்பணமாக்கப்படும்.

மேலும்ஒவ்வொருவரும்ஓம்நமசிவாய எனும் மந்திரத்தை குறைந்தது 1008 முறை எழுதி அனுப்புவது விரும்பத்தக்கது.

இப்புனிதமான கைங்கரியத்தில் ஆலய அறங்காவலர்கள், அரச தனியார் உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன சமூகத்தினர்கள் மற்றும் இந்து அமைப்புக்கள் தாங்கள் அனைவரும் முழுமனதுடன் ஈடுபடுவதோடு சைவமக்கள் அனைவரையும் இப்பணியில் ஈடுபடுத்தி ஆன்மீகப் பலத்தை பெருக்கிட ஒத்துழைப்புத் தருமாறு அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# சிதம்பரம் வெளிப்படுத்திய இலங்கை இரகசியம்

தில்லை என்று போற்றப்படும் சிதம்பரத்தில் உள்ள பெருமைகளில் சிதம்பர இரகசியமும் ஒன்று. இதன் காரணமாக கடும் இரகசியத்தை சிதம்பர இரகசியம் என்று கூறிக்கொள்ளும் வழக்கம் சைவத் தமிழர்களிடையே மரபாயிற்று.

அதேநேரம் சிதம்பரம் என்ற பெயருக்கும் எங்களுக்கும் நிறையவே தொடர்புண்டு. தமிழகத்தில் உள்ள சிதம்பரம் கோயிலுக்கு ஈழத்தமிழர்கள் செல்வதும் தங்கள் சொத்துக்களை சிதம்பரத்திற்கு உயில் எழுதிக் கொடுப்பதுமான ஒரு நடைமுறை இருந்ததன் காரணமாக யாழ்ப்பாணத்தில் சிதம்பரத்தின் ஆதனங்கள் நிறையவே இருந்தன – இருக்கின்றன.

இது தவிர 1983ஆம் ஆண்டு நடந்த யூலைக் கலவரத்தின் போது தென்பகுதியில் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களை வடபுலத்திற்கு ஏற்றிவருவதற்காக அன்னை இந்திரா காந்தி சிதம்பரம் என்ற கப்பலை அனுப்பி வைத்தார்.

சிங்களப் பேரினவாதத்தின் ஊழிக் கூத்தில் எல்லாம் இழந்த தமிழ் மக்களை சிதம்பரம் கப்பல் கரை சேர்த்தது.

இவ்வாறாக சிதம்பரத்திற்கும் எங்களிற்குமிடையேயான தொடர்பு நெருக்கமாக இருக்க, இப்போது இந்திய மத்திய அமைச்சர் சிதம்பரம் இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே என்று அதிரடியாகக் கூறியிருப்பது சிதம்பரம் என்ற பெயருக்கும் எங்களுக்குமான தொடர்பை மேலும் இறுக்கமாக்கியுள்ளது.

இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று இதுவரை இந்திய மத்திய அரசைச் சார்ந்த எவரும் கூறவில்லை. ஆனால் இப்போது மத்திய அமைச்சர் சிதம்பரம் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்ற கூறியிருப்பதன் மூலம்,

இலங்கை தொடர்பாக இந்திய மத்திய அரசு இரகசியமாக வைத்திருந்த ஒரு பெரும் விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்ற உண்மை தெரிந்திருந்தும் அந்த இரகசியத்தை இதுவரை வெளிப்படுத்தாமல் இருந்த மத்திய அமைச்சர் சிதம்பரம் இப்போது கூறியதற்கான காரணம் என்ன? அவர் அவ்வாறு கூறியதற்குப் பிரிட்டிஷ் பிரதமர் கமரூனின் யாழ்ப்பாண வருகை செல்வாக்குச் செலுத்தியதா? என்ற கேள்விகள் எம்மைப் பொறுத்தவரை அவசியமற்றவை.

அவ்வாறான கேள்விகள் எழுப்பப்படும் போது ஒரு முக்கியமான விடயத்தை நாங்களே வலுக் குறைத்துக் கொள்வதாக நிலைமை முடியும். எனவே தேவை அற்ற வினாக்களை விடுத்தால்,

இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்பதை இந்திய மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கை தொடர்பான அந்த இரகசியத்தை சிதம்பரம் வெளிப்படுத்தியுள்ளார் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

எதுவாயினும் வன்னிப் போரின் போது இரட்டை வேடத்தல் நடித்த இந்திய மத்திய அரசுக்கு இப்போது ஞானம் பிறந்துள்ளது.

வன்னிப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற நிபந்தனையை, இலங்கை அரசு மீறியதன் காரணமாக இந்தியா இப்போது தனது திருப்பெருவடிவத்தைக் காட்டத்தொடங்கியுள்ளது.

இந்தியாவின் திருப்பெருவடிவம் இலங்கை அரசுக்கு மெய்யறிவைக் கொடுக்கிறதா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# இந்து ஆலயத்தில் இடம்பெறும் திருட்டுக்களை தடுக்க சிவ ஆராதனையும் பிரார்த்தனையும்

யாழ்.குடாநாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வரும் இந்து ஆலயங்களை மையப்படுத்திய திருட்டுச் சம்பவங்கள் அற்றுப்போவதற்கும் ஆலயங்களின் புனிதத் தன்மையை பாதுகாப்பதற்கும் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் புதன்கிழமை 4ஆம் திகதி சிவ ஆராதனையும் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் யாழ். ஆனைப்பந்தியிலுள்ள அலுவலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் சர்வதேச இந்துமதக்குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசு தேவக்குருக்கள், ஒன்றியத்தின் வித்துவசபை சிவாச்சாரியார் சிவஸ்ரீ.து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், ஒன்றியச் செயலாளர் சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்தக்குருக்கள் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள் அற்றுப்போவதற்கும் ஆலயங்களின் புனிதத் தன்மை பாதுகாக்கப்படுவதற்கும் மக்களின் வாழ்வு உயர்வடையவும் எல்லாம் வல்ல மூலப் பரம்பொருளாக இருக்கும் சிவனை ஆராதிக்கின்ற நிகழ்வு நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8மணிமுதல்பிற்பகல்4.15வரைகுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ் தானத்தில் ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

குடாநாட்டின் பிரசித்தமான ஆலயங்களின் அனுசரணையுடன் அந்தந்த ஆலயத்தின் குருமார்களால் காலை 8மணிமுதல் மாலை 4 மணிவரை சிவலிங்கப்பெருமானுக்கு திரவிய அபிஷேகம் நடத்தப்படும். நாம் எமது குறைகளை சொல்வதற்கு எமக்கு இறைவனைத் தவிர இவ்வுலகில் எவரும் இல்லாத காரணத்தினால் நாம் இறைவனிடம் எமது வேண்டுதல்களை இப்புனிதமான பக்திபூர்வமான பிரார்த்தனை மூலமாக எடுத்துக்கூறி ஆறுதல் அடைவோம்.

இப்பிரார்த்தனைக்கு சிவாச்சாரிய பெருமக்கள், திருமுறையாளர்கள் (ஓதுவார் மூர்த்திகள்), நாதஸ்வர தவில் வித்துவான்கள், இசை ஆசிரியர்கள், இசை பயிலும் மாணவர்கள், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், சிறப்பாக கலைத்துறை சார்ந்த சங்கீத, நடன,மிருதங்க, பண்ணிசைபேராசிரியர்கள், மாணவர்கள் ஆலயபரிபாலனசபையினர்கள், அறங்காவலர்கள், இந்துமன்றங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சிவனடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு பிரார்த்தனைக்கு வலுச்சேர்க்குமாறும் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-6)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உலக சமுதாய சேவா சங்கம்



நல்வாழ்வுக்கு வழிகாணவேண்டுமெனில் வாழ்வின் நலக்கேட்டுக்குக் காரணங்களை முதலில் அறியவேண்டும். பழக்கத்தால் செயலும், கருத்தும் உருவாகி அவற்றுக்கு அடிமையாகி வாழும் மக்களுக்கு விழிப்பூட்டி நல்வழிக்குத் திருப்புவது ஒரு சில நாளில் ஒரு சில மனிதரால் முடிக்கக்கூடிய செயலன்று. ஒரு மனிதன் மக்கள் வாழ்வின் நோய்களுக்கு மருந்து கண்டு பிடிக்கலாம். அதுசரியானதுதானா என்று நேர்மையில் சிந்தித்து முடிவெடுக்க விளக்க அறிவு பெற்றவர்கள் உலகில் பெருகவேண்டும்.

பல துறைகளிலும் பல நாட்டிலும் வாழும் மக்களுடைய அறிவு மயக்கநிலையிலிருந்து விடுபட்டு விளக்கநிலை பெறத்தக்க சூழ்நிலையும் வாய்ப்பும் பெருக வேண்டும். செல்வந்தர்கள், அரசியல் தலைவர்கள், வணிகர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள் இவர்கள் பலிரிடம் இன்று உலக நல நோக்கம் மிகுந்து வருகின்றது.

அவர்களுடைய ஒத்துழைப்பால் ஓருலகப் பண்பாட்டு அரங்கு நிறுவி அதன்மூலம் திட்டமிட்ட முறையில் மக்கள் பண்பாட்டை உயர்த்தவேண்டும். விஞ்ஞான அறிவு பெருகியுள்ள இக்காலத்தில் இளைஞர்களுடைய உள்ளத்தைத் தொட்டு ஊக்கி நலம் பெருக்கும் நிறுவனம் செயல்புரியவேண்டும். ஆம் இதனை யார் தொடங்குவது? எப்படி மக்களை மயக்க நிலையிலிருந்து விளக்கநிலை வாழ்வுக்கு மாற்றுவது? மக்கள் நலம் பேசிப்பேசி மாண்டவர்கள் எண்ணிக்கை [illegible].

[illegible] விளைந்த பயன்களும் எடுத்துக்காட்ட முடியவில்லையே! மீண்டும் இச்சோர்வு மனப்பான்மையில் வினாக்கள் எழுகின்றன. உலக சமுதாய சேவா சங்கம் என்னும் நிறுவனமே தக்க பதிலாக இயங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் டில்லி விஜயத்தில் மத்தியரசு இரகசியம் பேணியது ஏன்?

## ம.தி.மு.க.செயலாளர் வைகோ கொதிப்பு

(சென்னை)

**இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான்குர்ஷித் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ டில்லி வந்து சந்திப்பொன்றை நடத்திவிட்டுச் சென்றுள்ளார். இந்த வருகையை மத்திய அரசு பரம இரகசியமாக மூடி மறைத்ததன் மர்மம் என்ன? ஈழத்தமிழர்களுக்கு மன்னிக்க முடியாத துரோகத்தை இந்திய அரசு தொடர்ந்து செய்து வருகிறது என ம.தி.மு.க.செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை அரசு, ஈழத் தமிழ் இனப் படுகொலையை நடத்த இந்தியாவின் மத்திய காங்கிரஸ் அரசுதான் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆயுதங்கள் கொடுத்தும் இந்தியாவின் முப்படைத் தளபதிகள் மூலம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை இயக்கியும், மன்னிக்க முடியாத துரோகத்தைச் செய்தது.

கடந்த2007ஆம் ஆண்டில், இந்திய-இலங்கைக் கடற்படை தகவல் பரிமாற்ற ஒப்பந்தம் செய்து, புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கைக்கு தகவல்கள் தந்தும், புலிகளுக்கு வந்த 14 கப்பல்களைக் கடலில் மூழ்கடிக்கச் செய்தும், அப்போரில் உதவியது.



அதனால்தான், யுத்தத்தில் தாங்கள் வெல்ல முடிந்தது என்றும், இப்போரை இயக்கியதே இந்தியாதான் என்றும் இலங்கை ஜனாதிபதியும் இலங்கை அமைச்சர்களும் கூறினர்.

இந்த வாரத்தில், இந்தியக் கடற்படைத தளபதி டி.கே.ஜோஷி இலங்கைக்கு ஐந்து நாட்கள் பயணமாகச் சென்று, அந்நாட்டின் தலைமைத் தளபதி ஜெகத் ஜெகசூரியவையும், கடற்படைத் தளபதி ஜெயநாத் கோலம் பேஜ் இருவரையும் சந்தித்துள்ளார்.

இருநாட்டு கடற்படைத் தளபதிகள் கூட்டாக நிருபர்களிடம் கூறுகையில்,

இரு நாட்டு கடற்படையும் அனைத்து பிரச்சினைகளிலும் இணைந்தே சிறப்பாகச் செயறபடுகிறது என்றும், கடலில் மீனவர்கள் பிரச்சினை உள்ளிட்ட அனைத்தையும் திறமையாகக் கையாள்வதாகவும் தெரிவித்தனர்.

அப்படியானால், தாய்த் தமிழகத்து மீனவர்கள் 578 பேர் இலங்கை கடற்படையால் கொல்லப்பட்டதற்கு இந்தியக் கடற்படையும் கூட்டுக் குற்றவாளி என்பது நிரூபணமாகிறது.

இந்தியாவில் நான்கு ஆண்டுகால கடல்சார் பயிற்சிப் படிப்புக்கு, இலங்கை கடற்படையினருக்கு மட்டும்தான் மற்றைய நாடுகளைவிட முன்னுரிமை கொடுக்கப்படும் என்று இந்தியத் தளபதி ஜோஷி கூறியுள்ளார்.

இதற்கு இடையில், கடந்த வியாழன், வெள்ளி இரு நாட்களிலும் இலங்கை பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இரகசியமாக டில்லிக்கு வந்து, இந்திய வெளி விவகாரத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தையும், அவரது துறையின் உயர் அதிகாரிகளையும், இராணுவ அமைச்சகத்தின் உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசி, பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த வருகையை பத்திரிகையாளர்களுக்குக் கூட தெரிவிக்காமல், மத்திய அரசு பரம இரகசியமாக மூடி மறைத்த மர்மம் என்ன? ஈழத் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் மன்னிக்க முடியாத துரோகத்தைத் தொடர்ந்து செய்து வருகிற இந்திய அரசு, சிங்களவர்களின் பலி பீடத்தில் தமிழ் இனத்தின் உயிர்களைக் காவு கொடுக்கும் கொடிய வஞ்சகத்தை மூடி மறைக்க முடியாது.

வேதனையால் வெந்துபோன தமிழர் இதயத்தில் சூட்டுக்கோலைத் திணிக்கும் மத்திய காங்கிரஸ் அரசுக்கு தக்கபாடத்தைத் தமிழ்ச் சமூகமும், வரலாறும் நிச்சயமாகக் கற்பிக்கும் என எச்சரிக்கிறேன என அதில் கூறியுள்ளார். (அ-2)

## ஆளில்லா விண்கலம் சந்திரனுக்கு பயணம்

சீனா முதல் முறையாக சந்திரனுக்கு ஆளில்லா விண்கலத்தை அனுப்புகிறது.



சாங் இ-3 (கியான் வைபிங் -3) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விண்கலம், ஜிசாங் செயற்கைக் கோள் ஏவுதளத்திலிருந்து இன்று திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் விண்ணில் செலுத்தப படவுள்ளதாக விண்கல ஏவுதளத் தலைமை அலுவலகக் குழுவினர் தெரிவித்தனர்.

சீனா இதற்கு முன்பு சந்திரனுக்கு அனுப்பிய 2 விண்கலங்களும் சந்திரனின் சுற்றுப் பாதையில் சுற்றி வருகின்றன. தற்போது சந்திரனின் மேற்பரப்பை ஆராய்ச்சி செய்வதற்காக ஆளில்லா விண்கலத்தை சீனா முதல் முறையாக அனுப்புகிறது.

சந்திரனில் உள்ள இயற்கை வளங்கள், மேற்பரப்பில் உள்ள பொருட்கள், புவியியல் அமைப்பு போன்றவற்றை "யுது" ஆய்வு செய்யும். (2)



**ஆப்கானிஸ்தானிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாப்ஷெரீப்பிற்கு தலைநகர் காபூலில் இராணுவ வரவேற்பு அளிக்கப்பட்டது. அருகில் ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் நிற்பதைப் படத்தில் காணலாம்.**

# விமானம் வீழ்ந்து நொருங்கியது; 34 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(விண்டுக்)

மொசாம்பிக் நாட்டு விமானம் விழுந்து நொருங்கியதில் அதில் பயணித்த 34 பேர் பலியாகினர்.

மொசாம்பிக்கின் தலைநகரான மபுடோவில் இருந்து மற்றொரு ஆபிரிக்க நாடான அங்கோலாவின் தலைநகரான லண்டாவுக்கு மொசாம்பிக் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று புறப்பட்டுச் சென்றது.

அதில் 28 பயணி கள்,6 சிப்பந்திகள் என மொத்தம் 34 பேர் இருந்தனர். நமீபியா நாட்டின் வடகிழக்கு வான் எல்லை பகுதியில் பறந்து கொண்டிருந்த போது அந்த விமானம் திடீரென்று மாயமானது. விமானத்துடனான தகவல் தொடர்பு துண்டிக்கப் பட்டது.



வாப்வாடா தேசிய வனவிலங்கு பூங்கா பகுதியில் விமானம் விழுந்து நொருங்கி இருக்கலாம் என்று கருதப்பட்டது. இதைத்தொடர்ந்து மீட்புக்குழுவினர் அங்கு சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

வனவிலங்கு பூங்கா பகுதியில் விமானம் விழுந்து நொருங்கி எரிந்து கிடந்ததை அவர்கள் கண்டுபிடித்தனர்.

விமானத்தின் எரிந்த பாகங்கள் அடந்த வனப்பகுதி முழுவதும் சிதறிக் கிடநதன.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த யாரும் உயிர்பிழைத்திருக்க வாய்ப்பு இல்லை என்று நமீபிய பொலிஸ் அதிகாரி தெரிவிததார்.

பலியானவர்களின் உடல்களை தேடி கண்டுபிடிக்கும் முயற்சியில் மீட்புக்குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு உள்ளனர். (2)

### ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு

# உக்ரைனில் 10 ஆயிரம் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

ஐரோப்பிய யூனியனுடன் உக்ரைனை இணைக்க வலியுறுத்தி, அந்நாட்டின் தலைநகரை 10 ஆயிரம் பேர் நேற்றுமுன்தினம் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மேலும், உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

சுதந்திரச் சதுக்கத்தில் திரண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த 2ஆயிரத்திற்கு மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டனர். அப்போது, பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுககும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

ஆனால், வன்முறைகள் நிகழாமல் நிலைமையைபொலிஸார் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

ரஷ்யாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள ஐரோப்பிய யூனியனுடன் உக்ரைனை இணைக்கும் முயற்சிக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட அந்நாட்டு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் மறுத்து விட்டார்.

அதைத் தொடர்ந்து ஒரு வாரமாக உக்ரைன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கான ஒப்பந்தத்தை ஜனாதிபதி ஏற்கும் வரை போராட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, மக்களின் இந்தப் போராட்டத்தை ஊக்குவித்து வரும் எதிர்க்கட்சித் தலைவர்கள், உக்ரைனில் அரசுக்கு எதிராக மக்கள் நடத்தி வரும் பிரமாண்டமான போராட்டங்கள் எங்களுக்கு வலுச்சேர்த்துள்ளன என்று தெரிவித்தனர்.

சுதந்திரச் சதுக்கத்தில் போராட்டம் நடத்தவுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மக்களின் போராட்டம் குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி விக்டர் யானுகோவிச், உக்ரைன் ஒருபோதும் ரஷ்யாவுடன் வர்த்தக உறவில் ஈடுபடாது. ஏனெனில், உக்ரைனின் பொருடகளை இறக்குமதி செய்ய அந்த நாடு தடை விதித்துள்ளதுடன், பல்வேறு வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது என்றார். (2)

# இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா பயிற்சி வழங்கவேண்டும்

### நாச்சியப்பன் கூறுகின்றார்

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சியளிக்க வேண்டும என்று மத்திய இணையமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் தென்னை வளர்ச்சி பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டபோதே மத்திய இணையமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் பத்திரிக்கையாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அப்போது அவர், கூறுகையில்,

"இந்தியாவில் கடந்த 21 ஆண்டுகளாக அகதிகளாக உள்ள இலங்கை தமிழர்களின் நலனை கருத்தில் கொண்டும், அவர்களை நல்ல முறையில் இலங்கையில் குடியேற்றி, அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதே ஆளும் காங்கிரஸ் கட்சியின் ஒரே கொள்கையாகும். அந்தக் கொள்கையை வென்றெடுக்க வேண்டுமானால், இலங்கை அரசுடன நாம் சுமுகமான உறவை கொண்டிருக்க வேண்டும். தற்போது நாம் அந்த நிலையை கடைப் பிடித்து வருவதால், இலங்கை அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது உள்ளிட்ட சிலவற்றை நாம் செய்து கொடுக்க வேண்டியுள்ளது.



எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையிலுள்ள தமிழர்கள், இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளின் நிலை மேம்பட வேண்டும் என்பதே காங்கிரஸின் ஒரே நிலைப்பாடு என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடனான ஒருநாள் தொடர்; தென்னாபிரிக்க அணிக்கு ஆறுதல் வெற்றி


பாகிஸ்தான் வீரர்களை கலங்கடித்த பிலாண்டர் பந்துவீசிய பின்

பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் நான்கு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதன் மூலம் தென்னாபிரிக்க அணி ஆறுதல் வெற்றியைத் தேடிக் கொண்டது.

தென்னாபிரிக்கா சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணி, அந்நாட்டு அணியுடன் 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது.

இத்தொடரின் முதலிரு போட்டிகளிலும் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணி தொடரை கைப்பற்றியிருந்த நிலையில்,

இரு அணிகளுக்கும் இடையிலான 3-வதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டி கடந்த 30-ம் திகதி சென்சூரியன், சுப்பர்ஸ் போட் பார்க்கில் நடந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி, பாகிஸ்தானை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதற்கமைய துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானிய அணி 46.5 ஓவர்களில்சகல விக்கட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி அணி சார்பாக அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் தனி ஒரு வீரராக போராடி ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களை எடுத்தார்.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில் வேர்ணன் பிலாண்டர் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை சீரான இடைவெளியில் இழந்தாலும் அணித்தலைவர் டி வில்லியர்ஸின் பொறுப்பான ஆட்டத்தினால் 38.4 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை 181 ஓட்டங்களைப் பெற்று வெற்றியினை தனதாக்கியது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அணித்தலைவர் ஏபி.டி.வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 41 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சஜீட் அஜ்மல் 34 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

முதலாவது போட்டியில் 23 ஓட்டங்களாலும், இரண்டாவது போட்டியில் ஒரு ஓட்டத்தினாலும் பாகிஸ்தான் அணியிடம் தோல்வி கண்டு தொடரை இழந்திருந்த தென்னாபிரிக்க அணிக்கு இப்போட்டியில் கிடைத்த வெற்றி ஆறுதலை கொடுத்தது.

இப்போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சியை கொடுத்து சரிவை ஆரம்பித்து வைத்த தென்னாபிரிக்க அணியின் வேர்ணன் பிலாண்டர் தெரிவானதுடன், போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராக பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்டு தொடரில் 5 விக்கெட்டுக்களை சாய்த்த பாகிஸ்தான் அணியின் சஜீட் அஜ்மல் தெரிவானார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த சுற்றுத்தொடரில் 2:1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி தொடரை வென்றுள்ளது


குயின்ரன் டி ஹொக்கை பிடியெடுத்து ஆட்டமிழக்கச் செய்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் அஜ்மல்

## இலங்கை விவகார...

வதற்கு வெளியாட்களுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் தேர்தல் நடக்கவுள்ள சூழ்நிலையில், வாக்கு சேகரிக்கும் நோக்குடன் அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ள கருத்துக்களை இலங்கை பெரிய அளவில் கணக்கில் எடுக்கவில்லை என்றும் அமைச்சர் சுசில் குறிப்பிட்டார்.

அமைச்சர் சிதம்பரம் தேர்தல் வாக்குகளுக்காக பேசிய கருத்துக்களை இலங்கை கணக்கில் எடுக்காது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து எந்த இடத்திலும் குறிப்பிடப் படவில்லை, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன செய்துகொண்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி தற்காலிகமாகவே வடக்கு கிழக்கு பிராந்தியம் இணைக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

பின்னர், வடக்கு கிழக்கு இணைப்பு அரசியலமைப்புக்கு முரணானது என்று உச்சநீதிமன்றமே தீர்ப்பளித்த பின்னர் அதுபற்றி பேசவருக்கும் உரிமை கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

### முதலில் இந்தியாவின் பிரச்சினையைத் தீருங்கள்

எங்கள் நாட்டு மக்களுக்கு பயன படுத்த கழிப்பறைகள் இருக்கின்றன. முதலில் அவர்களை அவர்களின் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கச்சொல்லுங்கள். எங்கள் நாட்டுப்பிரச்சினைகள் பற்றி அவர்கள் பேசவேண்டியதில்லை. அவற்றை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்றும ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த் கூறினார்.

கனவுலகில் இருந்துகொண்டு அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் சிதம்பரத்தை முதலில இங்கு வந்து நிலைமையை பார்க்கச் சொல்லுங்கள். தென்னிந்தியாவை விட வடக்கு-இலங்கையிலுள்ள மக்கள் நல்ல வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள் என்றும் இலங்கை அரசாங்கம் சார்பில் பேசவல்ல அதிகாரியான சுசில் பிரேமஜயந்த் கூறினார். (செ-4)

## தமிழர்களின் உரிமை...

படுகின்றன என்றும் அனைத்துலக ரீதியில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த நிலையிலேயே, அது தொடர்பில் ஆராய்வதற்காக அமெரிக்க காங்கிரஸ் சபை இந்தக் குழுவை நியமித்துள்ளது. குறித்த குழு தனது பணிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

இந்தக்குழுவின் முன்னிலையில், இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவராக முன்னர் செயற்பட்ட ஆஸ்லி வில்சும் சாட்சியமளித்துள்ளார். இலங்கையில் தற்போதைய அரசின் ஆட்சியின் கீழ் வடக்குத் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றது என்றும், சிங்கள கிராமங்களை அப்பகுதிகளில் உருவாக்குவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 13 ஆவது அரசமைப்பின் பிரகாரம் அதிகாரங்களைப் பகிரும் பொறி முறையை இலங்கை அரசு பலவீனப் படுத்துகின்றது என்றும் ஆஸ்லி வில்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, அமெரிக்க அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் இந்தக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிததுள்ளனர்.

அனைத்து தரப்புகளிடமும் சாட்சியங்களை திரட்டியப்பின்னர் தனது விசாரணை அறிக்கையை காங்கிரஸ் குழு வெளியிடவுள்ளது என தெரியவருகிறது. (செ-4)

## தென்னாபிரிக்க மண்ணில் சாதிக்குமா தோனி அன் கோ!



தோனி தலைமையிலான இந்திய அணி, தென்னாபிரிக்க மண்ணில் 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர், 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் பங்கேற்பதற்காக அந்த நாட்டை நோக்கிய கிரிகெட் பயணத்தை நேற்றிரவு ஆரம்பித்தது.

முதலில் 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி, அதன் பின்னர் 2 போட்டிகளைக கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேறகிறது.

ஒருநாள் போட்டிகள் இம்மாதம் 5-ம், 8-ம், 11-ம் திகதிகளில் முறையே ஜோகனஸ்பேர்க், டர்பன் மற்றும் செஞ்சூரியனில் நடக்கவுள்ளன.

இதற்கான 16 பேர் கொண்ட இந்திய அணி கடந்த 25-ம் திகதி அறிவிககப்பட்டது.

சமீபத்திய மேற்கிந்திய தொடர் உட்பட தொடர்ச்சியாக 6 கிண்ணங்களை வென்ற உற்சாகத்தில் இந்திய வீரர்கள் உள்ளனர்.

ஒருநாள் தொடர் முடிந்தபின் இரண்டு நாள் பயிற்சிப் (டிச., 14-15) போட்டியில் விளையாடுகிறது.

இதன் பின்தான் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் தொடங்குகிறது. முதல் டெஸ்ட் டிசம்பர் 18-22ல் ஜோகனஸ்பேர்க்கில் நடக்கவுள்ளது, இந்த டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க 17 பேர் கொண்ட இந்திய அணி ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டுவிட்டது.

## சாவ்லாவின் 2-வது இன்னிங்ஸ்



இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர பியூஷ் சாவ்லா தனது நீண்டநாள் தோழியை கரம்பிடித்தார். இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் பியூஷ் சாவ்லா, இவர் தனது தோழி அனுபூதியைத் திருமணம் செய்து கொண்டார்.

மொராதாபாத் நகரில் கடந்த 29-ம் திகதி நடந்த இத்திருமணத்தில் உத்தரப் பிரதேச கிரிக்கெட் அணி வீரர்கள், பியூஷ் சாவ்லாவின் நண்பர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் பங்கேற்றனர்.

இர்ஃபான் பதான், புவ்னேஷ்வர் குமார், ஜெயேந்திர பாண்டே உள்ளிட்ட கிரிக்கெட் வீரர்கள் திருமணத்தில் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர். பியூஷ்சாவ்லா இதுவரை இந்திய அணிக்காக 3 டெஸ்ட் போட்டி (7 விக்கெட்) மற்றும் 25 ஒருநாள் ஆட்டங்களில் (32 விக்கெட்) பங்கேற்றுள்ளார். எம்பிஏ படித்துள்ள அனுபூதி, மீரட் நகரைச் சேர்ந்த மருத்துவர் அமீர் சிங் சௌகான் என்பவரது மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை இனப்படுகொலை...

இந்தியாவின் தாம்பரம் அருகே உள்ள மேடவாக்கம் பகுதியில் நேற்றையதினம் கிராம யாத்திரையை தொடங்கி வைத்த பாரதிய ஜனதா மூத்த தலைவர் இல.கணேசன் இலங்கை இனப்படுகொலை குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டார்.

அதன்போது, பாரதிய ஜனதா மீது ப.சிதம்பரம் திடீரென்று குற்றம் சுமத்தி உள்ளார். இது காலம் கடந்து ஏற்பட்ட ஞானோதயம்.

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கினால் அது எப்படி இந்தியாவுக்கு எதிராக திரும்புமோ அதேபோல் இலங்கை அரசுக்கு கொடுக்கும் ஆயுதங்கள் தமிழர்கள் மீது பாயும் என்பதை பா.ஜனதா உணர்ந்து இருந்தது.

எனவேதான் இலங்கை அரசு ஆயுதம் கேட்டபோது கொடுக்க மறுத்ததோடு இலங்கை இராணுவ வீரர்களின் ஆயுத பயிற்சிக்கும் தார்மீக ஆதரவு கொடுக்க மறுத்தவர் வாஜ்பாய் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும்.

இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய மாநாடு வெறும் நாடகம். இதனால் பயன்பெறப் போவது மகிந்த ராஜபக்ஷ. இன்னல்களுக்கு ஆளாகப் போவது தமிழர்கள் என்பதால் பொது நலவாய மாநாட்டை பா.ஜனதா எதிர்த்தது.

இங்கிலாந்து பிரதமர் கமரூனின அடிப்படை தைரியம் கூட மன்மோகன் சிங்குக்கு வராதது வருத்தம் அளிக்கிறது. இனியும் இந்த பிரச்சினையில் காங்கிரஸ் போடும் நாடகத்தை மக்கள் நம்பமாட்டார்கள்.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு மகிந்த ராஜபக்ஷ 100 சதவீத பொறுப்பு என்றால் பிரதமர மன்மோகன்சிங்குக்கு 50 சதவீத தார்மீக பொறுப்பு உண்டு.

இதன்படி மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ப.சிதம்பரத்துக்கும் தார்மீக பொறுப்பு உண்டு என்பதை அவர் உணரவேண்டும். காலம் கடந்து உண்மைகளை மறைக்க குற்றம் சுமத்துவதை தவிர்க்க வேண்டும் என இல.கணேசன் தெரிவித்துள்ளார். (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேகங்களை...

குறித்த மைக்ரோ ரக துப்பாக்கியினை பயன்படுத்து வோர் மிகக்குறைவாக காணப்படுகின்ற நிலையிலும், யுத்தத்தின் போது வடபகுதியில் நிகழ்த்தப்பட்ட பல கொலைச் சம்பவங்களிற்கு குறித்த மைக்ரோ ரக துப்பாக்கியே பயன்படுத்தப் பட்டுள்ள நிலையிலும் குறித்த கொலைச் சம்பவம் பலரிமையே பலத்த சந்தேகத் தினையேற்படுத்தியுள்ளது.

குறித்த கொலையினை நிகழ்த்திய கொலையாளி நன்கு திட்டமிட்ட வகையிலும், மைக்ரோ ரக துப்பாக்கியினை பயன்படுத்துவதில் தேர்ச்சி பெற்றவராகவும் உள்ளதனால்தான் ஒரே சூட்டில் மரணத்தினை ஏற்படுத்தியுள்ளார் என யாழ் பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மர்மமாகவுள்ள குறித்த கொலையின் பின்னணியில் ஒரு ஆட்டோ சாரதி உள்ள போதிலும் அவரை இனங்காண முடியாமல் உள்ளதுணவும் இந் நபரினை கைது செய்தால் கொலையின் மர்ம முடிச்சுக்களினை அவிழ்த்துவிடலாம் எனவும் யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். எம். ஜெப்றி தெரிவித்துள்ளார்.

பிரதேச சபைத் தலைவர் கொலை செய்யப்படும் போது அவர் மது போதையில் இருந்தமையும் கண்டறியப் பட்டுள்ளது.

ஆகவே மதுபோதையில் பிரதேச சபைத் தலைவர் இருந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தியே நன்கு திட்டமிடப்பட்ட நீண்ட அவதானிப்பிலேயே குறித்த மரணம் நிகழ்த்தப்பட்டுள்ளது என புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகையினால் கொலை செய்யப்பட்ட தலைவரிற்கு நன்கு அறிமுகமான ஒரு நபரே அவரை கொலை செய்திருக்கலாம் எனவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் மர்மங்களுக்கு மத்தியில் நேற்றுக் காலை நெடுந்தீவு கிழக்கினைச் சேர்ந்த நபரொருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டுள்ளார். (செ-4-9)

## இலங்கை...

ஒட்டுமொத்தமாகப் புறக் கணித்துவிட்டு, இலங்கை இராணுவத்துடன் ஒத்துழைக்கும் கொள்கையை இந்தியா கையாண்டு வருவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி வழங்குவதை நிறுத்துமாறு இந்திய இராணுவ அமைச்சகத்துக்கு, அரசாங்கம் உத்தர விட வேண்டும் என்றும் ஜெயலலிதா தனது கடிதத்தில் இந்தியப் பிரதமரைக் கேட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய கடற் படையின் தலைமை கட்டளை அதிகாரியான டி. கே. ஜோஷி அவர்கள், இந்தியாவில், இலங்கை கடற் படையினருக்கு 4 ஆண்டு கால தொழில்நுட்ப பட்டப் படிப்பை முன்னுரிமை அடிப்படையில் வழங்கவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வாக்குறுதி வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## இராணுவத்தினரின்...

தெரிவிக்கையில்,

பாதீனியம் ஹிஸ்டெரோ பொரஸ் என்ற செடி இலங்கைக்குள் அண்மைக் காலத்தில் உள் நுழைந்த ஒரு களைச் செடி. முச்சுத்திணறல், அஸ்மா, சொறி, அரிப்பு போன்றவற்றிற்கு இந்த அசுர களைச் செடி காரணமாக இருக்கிறது.

தானியப் பயிர்களின் வளர்ச்சியை வெகுவாகக் குறைக்கவல்லது பார்தீனியம். வேறு பலவிதங்களில் மனித வாழ்விற்கு ஒவ்வாததாக இந்தக் களை காணப்பட்டுள்ளது.

இதை அழிப்பதற்கு எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆனால் இது பற்றிய அறிவைப் பெறுவதுதான் மிக முக்கியம். ஏனெனில் பல வருட காலமாக அதன் தாக்கம் பற்றி அறிந்திருந்தோமானால் பெற்றோரிடம் இருந்து நாமும் எம்மிடமிருந்து எமது சந்ததியினரும் அது பற்றி அறிந்து கவனமாக நடந்து கொண்டிருப்பார்கள். ஆனால் இது அண்மையில் அறிமுகமாகிய அசுரக் களை. அது பற்றி ஊடகங்களும் நாமும்தான் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அந்த ஒரு முக்கியமான நடவடிக்கையிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம்.

இந்தச் செடிபற்றி எல்லாமே எதிர் மறையாகக் கூறவேண்டிய அவசியமில்லை. இதன் நன்மை பயக்கும் உபயோகங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. எமது சரும வீக்கத்திற்கு இதனால் மருந்து செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

வாதத்திற்கு இது மருந்து எனப்படுகிறது. வயிற்றுழைவுக்கும் வாந்திபேதிக்கும் இது மருந்து எனப்படுகிறது. மேலும் இன்னும் சில வருத்தங்களுக்கும் இதிலிருந்து மருந்து தயாரிக்கிறார்கள். வயிற்றோட்டம், மலேரியா போன்ற நோய்களுக்கும் இது மருந்து என்கின்றார்கள்.

ஆனால் அவற்றை மருந்து செய்ய எடுப்பதனால் மிக அவதானமாய் அதை ஒதுக்குப் புறங்களில் பயிரிட்டுக் கவனமாக அறுவடை செய்தெடுக்க வேண்டும்.

கஞ்சா செடி கூட ஆயுர்வேதத்தில் பாவிக்கப்படுகிறது. அது ஆயுர்வேத மருந்துகளில் பாவிக்கப்படுகிறது. ஆனால் அதை அனுமதியின்றிப் பயிரிடுவதும் கைவசம் வைத்திருப்பதும் சட்டத்திற்கு மீறிய செயல்களாக ஆக்கப்பட்டுள்ளன. நான் நீதிபதியாக இருந்தபோது பலருக்குத் தண்டம் விதித்து அவர்கள் கைவசம் இருந்த கஞ்சா செடிகளைப் பறிமுதல் செய்து எரிக்கப் பண்ணியுமுள்ளேன்.

பாதீனியம் என்ற களை உலகத்தின் மிகப் பயங்கரமான ஏழு களைகளில் ஒன்றாக இனம் காணப்பட்டுள்ளது.

ஒரு செடி 10, 000- தொடக்கம் 15,000 வரையிலான விதைகளை வெளியிடுகின்றன. அவை வெளிப்பட்டு பல ஏக்கர் காணிகளுள் விழுந்து முளைத்து நிலத்தை நிரப்பி விடுகின்றன.

இந்தச் செடியில் நல்ல அம்சங்கள் நிமிர்த் தம் அதனை பாவிக்க ஏற்பாடுகள் செய்யும் வரையில் அதனை அழித்து விடுவதே சூழலுக்குப் பொருத்தமானது. அதையே எமது கமநல சேவைகள் திணைக்களம், வேளாண்மை அமைச்சு போன்றவை செய்ய முன் வந்துள்ளன. மக்கள் இது போன்ற கூட்டங்களின் போது அக்களை பற்றிய போதிய அறிவைப் பெற்று உரிய நட வடிக்கைகள் எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## நாய் விறாண்டி..

மிக்கு கடுமையான காய்ச்சல் ஏற்படவே கடந்த வெள்ளிக் கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிக் சைப்பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுத்தப்பட்டுவந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் இச் சிறுமி உயிரிழந்துள்ளார். (செ-4)


# கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## விற்பனையாகின்றன

கமநல திணைக்கள போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்

ஆக்கம்

**P. கமல்தாசன்**

கிடைக்கும் இடங்கள் :

பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலை,

கஜன், இராமச்சந்திரா புத்தகசாலை (வவுனியா)

(C-5635)

## பதவி வெற்றிடம்

● கணனி தட்டச்சு (தமிழ்) ● பக்க வடிவமைப்பு

ஆகியவற்றில் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள் (ஆண்கள்)

இரவுக் கடமைக்குரிய இப்பதவி வெற்றிடத்திற்கு நேர்முகத் தேர்வு, செயன்முறைப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். முன்னனுபவமும் தகைமையும் யாழ் நகர மையத்திற்கு அண்மித்த தூரத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவர்களும் 02.12.2013 (திங்கட் கிழமை) இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.

பொது முகாமையாளர்,

**வலம்புரி**

இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## இது புத்தம் புதிது

**உங்கள் கனடா கனவு சட்ட ரீதியாக நிறைவேற கையிலுள்ள காசே போதும்**

படிக்க உழைக்க விரைவான ஆலோசனை.(முன்னர் ஆலோசனை பெற்றவர்களும் இரண்டாம் தடவை இலவசமாக மேற்படி ஆலோசனை பெறலாம். நிபந்தனைகளிற்கமைவாக)

(C-5633)

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்**



175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 221 9016, 021 568 9090

www.thisaivisa.com

## வேலைவாய்ப்பு

**அரச துறை:** பாதுகாப்பு மற்றும் நகர அ/தி அமைச்சில் 2 பதவிகள், சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பல்கலைக் கழகம்–சமுத்திரவியல், சிறிலங்கா ரெலிகொம்...

**தனியார் துறை:** தம்ரோ, *Bata*, சொப்ட்லொஜிக் மற்றும் மூன் லைரி நிதி நிறுவனங்கள்... மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், ஹன்டிகப் இன்ரநஷனல் போன்ற அமைப்புகளிலும்...

**தற்போது கோரப்பட்டுள்ள** வேலைவாய்ப்புகள் பற்றிய

வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு.. 021 320 2787

(4632)

**கோலாசிற்றி** தொழில்வங்கி இனி நாம் இருக்கிறோம்

224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரில் வரவும்

தேவை: Office Staff *(male)*-பகுதி நேரம் பல்கலை மாணவர் விரும்பத்தக்கது

Digital **இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-5628)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101


# மரண அறிவித்தல்



**கனகராசா முகுந்தன்** (மதன்)

(வாணி மின்ஏற்று நிலைய உரிமையாளர்)

*விஸ்வமடுவை பிறப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட கனகராசா - முகுந்தன் (மதன்) அவர்கள் 17-11-2013 அன்று பிரான்சில் அகாலமரணமாகி விட்டார்.*

*அன்னார் கனகராசா - புஸ்பராணி (வாணி விலாஸ்) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராஜேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், சதீசின் அன்புக் கணவரும் சஜிதா (விஸ்வமடு ம/வி), சஞ்சிகா (விஸ்வமடு ம/வி), சயன் (விசுவநாதர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரவிந்தன் (குயிலன்) வாணி ரவல்ஸ், சுகந்தன் (ஜெகன்) வாணி விலாஸ், காலஞ்சென்ற வசிகரன் (வசி) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.*

*அன்னாரின் பூதவுடல் 30-11-2013 மாலை தொடக்கம் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 02.12.2013 இன்று திங்கட்கிழமை மதியம் 1 மணி அளவில் 12ஆம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

தகவல்

- குடும்பத்தினர் -

*76/1, விஸ்வமடு மேற்கு, விஸ்வமடு.*

*077 8376599 (கனகராசா), 077 4467577 (குயிலன்), 0770743072 (ஜெகன்)*

(C-5632)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org